பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 05 | திங்கட்கிழமை | (19-01-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 31

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## 2006 வரை ஜனாதிபதி பதவியை நீடித்தால்

# 2005க்குபின் புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்யும்

## சபாநாயகரிடம் அனுமதி கோருகிறது அரசு

(நமது நிருபர்)

**அரசியல் யாப்பின்படி மேலும் ஒரு வருடம் பதவியில் இருக்க ஜனாதிபதி அதிகாரம் அற்றவர் எனக் குற்றஞ்சாட்டி, ஜனாதிபதியின் இடத்தை நிரப்புவதற்குப் பாராளுமன்றத்தில் தேர்தல் ஒன்றை நடாத்துமாறு சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவை அரசாங்கம் கேட்கவுள்ளது.**

கடந்த 2000ஆம் ஆண்டின் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா முன னிலையில் தான் சத்தியப் பிரமாணம் செய்துள்ளதை அரச தொலைக் காட்சியினூடக ஜனாதிபதி உறுதி செயதுள்ளதைத் தொடர்ந்தே பாராளு மன்றத்தில் இந் நடவடிக்கையை மேற்கொள்ளும் தீர்மானத்தை அரசாங்கம் எடுத்துள்ளது.

1999 தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா வெற்றியீட்டியதைத் தொடர்ந்து அமைச்சரவை முன்னிலையில் உத்தியோக பூர்வமாகப் பதவி யேற்ற வைபவம் டிசம்பர் 22 அன்று தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பட்டது. ஆனால் அதன்பின்னர் 2 வது தடவையாக இரகசியமாக அவர் பதவியேற்ற விவகாரம் முதன் முதலில் 2003 நவம்பரில் லங்கா தீப பத்திரிகையில் வெளியாகியது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மூன்றாவது தடவையாக (1994, 1999,2000) அரசியல் அமைப்பிற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் தூதுவர் அகாஷி இன்று கொழும்பு வருகிறார்

### 21ஆந் திகதி வன்னியில் சந்திப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் தோன்றியுள்ள அரசியல் நெருக்கடி நிலை, தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை எவ்வாறு மீண்டும் முன்னெடுத்துச் செல்வது தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு ஜப்பானின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாஷி இன்று இலங்கை வரவுள்ளார்.

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரும் விசேட தூதுவர் அகாஷி டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக கொழும்பில் 23ஆந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள விசேட கூட்டத்தில் பங்குபற்றவுள்ளார். அத்துடன் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் திட்டவரைபு ஜனாதிபதியால் ஆராய்வு

## இந்திய சட்ட நிபுணரும் பங்கேற்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளினால் ஆரம்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சட்டவல்லுநர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் முன்மொழிவுகளை இலங்கையின் ஒருமைப்பாட்டுடன் இணங்க வைக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கலந்துரையாடலின் போது, இந்திய உயர் நீதிமன்ற சிரேஷ்ட சட்டத்தரணி ரி.கே.வேணுகோபாலன் உள்ளிட்ட சிரேஷ்ட சட்ட வல்லுநர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான முன்மொழிவுகள் அதிகாரப் பரவலாக்கத்தின் மாதிரிகள் என இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஆலோசனைக் கூட்டம் மீண்டும் ஒரு தடவை கூட்டப்படவுள்ளது

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று சடலங்களும் உறவினரிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கனகம்புளியடியில் வெட்டிக் கொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரது சடலங்களும் நேற்று உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

இ.சுதாகரன்(வயது28), சு.சொர்ணலதா(வயது 21) சு.வைஸ்ணவி (8மாதம்) ஆகிய மூவரது சடலங்களுமே பிரேத பரிசோதனையின் பினனர் உறவினரிடம் நேற்றுக் கைய

பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சட்டவல்லு நர்களுடன் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் முன்மொழிவுகளை இலங்கையின் ஒருமைப்பாட்டுடன் இணங்க வைக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இக் கலந்துரையாடலின் போது உள்ளிட்ட சிரேஷ்ட சட்ட வல்லுநர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு தமது ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர் மாதிரிகள் என இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் ஆலோசனைக் கூட்டம் மீண்டும் ஒரு தடவை கூட்டப்படவுள்ளது

(12ஆம் பக்கம் பார்க்க)

இ.சுதாகரன்(வயது28), சு.சொர்ணலதா(வயது 21) சு.வைஸ்ணவி (8மாதம்) ஆகிய மூவரது சடலங்களுமே பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. (த-7)

## இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்த முன்மொழிவு பெப்ரவரி இறுதியில் இடம் பெறும்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான முன்மொழிகள் எதிர் வரும் பெப்ரவரி மாத இறுதியில் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறி ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப் படுவதற்கு முன்னர் இரு நாடுகளுக்குமிடையில் அரசியல் நிலை, பேச்சுவார்த்தைகள் இடம் பெறவுள்ளன.

இப் பேச்சுவார்த்தையின் போது கடற்பாதுகாப்பு, புலனாய்வுத் தகவல் பரிமாற்றம் தொடர்பான முக்கிய அம்சங்கள் ஆராயப்படவுள்ளதாக ஹேரத் தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் பிரத

(12ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகரில் குண்டு வெடிக்க வேண்டும் தலைவர் பிரபாவுக்கு பிரதமர் செய்தி

### குற்றஞ் சாட்டுகிறார் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

தலைநகரில் குண்டுகளை வெடிக்கவைக்க வேண்டுமெனப் பிரதமர் ரணில் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார் என ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார். கடந்த 13ம் திகதி செவ்வாய்க் கிழமை தென்மாகாண சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் பேசும் போது ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

மிகவும் அடிமட்டத்திலுள்ள கட்சியைத் தேர்தலுக்குத் தயார் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் நாட்டின் பாதுகாப்பு நிலைபரம் தொடர்பாகவும் கவனமாக இருக்க வேண்டும்.

தலைநகரில் குண்டு வெடிப்புகளை ஏற்படுத்தி நாட்டைக் குழப்புமாறு பிரபாகரனுக்கு பிரதமர் செய்தி அனுப்பி வைத்திருக்கிறார். மேலும் தற்போது ஐ.தே.மு, பொ.ஐ.மு என்பவற்றை விட ஜே.வி.பி.யினர் கூடுதலாக ஜனநாயகக் கட்சியாக உருவெடுத்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காலத் திட்டவரைபு குறித்து அயர்லாந்தில் புலிகள் ஆராய்வர்

(கொழும்பு)

இடைக்கால திட்டவரைபு குறித்து மீண்டுமொரு சுற்றுக் கலந்துரையாடல்களை அயர்லாந்தில் நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது பெரும்பாலும் மார்ச் மாதம் அளவில் டப்ளின் புறநகர்ப் பகுதி ஒன்றில் நடாத்தப்படக் கூடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுக்களை விடுதலைப் புலிகள் கடந்த வருடம் இதேஇடத்திலேயே நடாத்தியிருந்தனர்.

இப்பேச்சுக்களில் சட்ட, அரசியல் அமைப்பு வல்லுநர்களான வி.உருத்திரகுமாரன், எம்.சொர்ணராஜா (சிங்கப்பூர்) பி.இராமசாமி(மலேசியா), இலங்கையின் முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி(அவுஸ்ரேலியா) ஆகியோருடன் புலிகளின் அரசியல் அமைப்பு, அரசியல் துறைக் குழுவினரும் பங்கு கொள்வர்.

புலிகளின் ஆலோசனைக் குழுவை அன்ரன் பாலசிங்கம் வழிநடத்துவார். இவருக்கு ஏதேனும் உடல் நலக் குறைவு ஏற்படின் சு.ப.தமிழ்ச் செல்வனே வழிநடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகரான பாலகுமார், நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி, நீதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு அபிவிருத்தி கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறும்

### சர்வதேச நாடுகளுக்குப் புலிகள் அழைப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் நிதி உதவி மூலம் வடக்குக் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கான மதிப்பீட்டுக் கூட்டம் இன்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள இவ் அபிவிருத்திக் கூட்டத்திற்கான அழைப்புக்களை ஜப்பான், அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் உட்பட 20க்கு மேற்பட்ட நாடுகளுக்கு புலிகளினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சார்பாக கொழும்பிலுள்ள தூதரங்களில் கடமையாற்றும் திட்டமிடல் அபிவிருத்தி போன்ற துறை சார்ந்த உயர் அதிகாரிகளுக்கும், உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் இந்தக கூட்டத்திற்கான அழைப்பை புலிகள அனுப்பி வைத்துள்ளனர். (ம)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## யாழ். போதனா வைத்தியசாலை சிறுநீரக சிகிச்சைப் பிரிவுக்கு நவீன இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் (HAEMODIALYSIS MACHINE) வழங்கும் வைபவம்

இலண்டன் வாழ் இந்துக்களின் அன்பளிப்பாக ரூபா 17,000,00 (ரூபா பதினேழு இலட்சம்) பெறுமதியான மேற்படி இயந்திரம் செஞ்சொற் செல்வர் திரு.ஆறு திருமுருகன் அவர்களின் வேண்டுகோளுக்கு இசைய இலண்டன் வாழ் திரு.வே.சிவசுந்தரம் என்ற அன்பர் ஊடாக இவ் இயந்திரம் பெறப்பட்டுள்ளது.

இவ் இயந்திரம் வழங்கல் வைபவம் யாழ்.போதனா வைத்தியசாலை சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் 19.01.2004 (இன்று) மாலை 4.00 மணிக்கு நிகழ உள்ளது.

**தலைவர்:-** வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
(பணிப்பாளர் யாழ். போதனா வைத்தியசாலை)

**ஆசியுரை:-** ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

**பிரதம விருந்தினர்:-** சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை)

**சிறப்பு விருந்தினர்கள்**

1. கலாநிதி க.சிவபாலன்
(பீடாதிபதி யாழ். மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)
2. வைத்திய கலாநிதி த.பேரானந்தராசா
(வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)
3. வைத்திய கலாநிதி எஸ்.ஜெயரட்ணம்
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை)
4. திரு.க.சிவாஜி
(அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)
5. வைத்திய கலாநிதி ச.குகதாசன்
(கண்வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை)

**நன்றியுரை:** செஞ்சொற்செல்வர் திரு.ஆறு திருமுருகன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
அன்புடன்
இரத்த சுத்திகரிப்பு பிரிவு
Haemodialysis Division
யாழ்.போதனா வைத்தியசாலை

(8129)


# அரியாலைப் பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு

(கொழும்புத்துறை)

அரியாலை முள்ளிப்பகுதி மணியந் தோட்டம், கொழும்புத்துறை நெடுக்குளம் ஆகிய பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்கிறது.

இதனைக் கட்டுப்படுத்த அவ்வூர் இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போய் விட்டன. இருப்பினும் இவர்களின் குழு நடவடிக்கைகள் காரணமாக ஓரளவு கட்டுப்பாட்டில் இருந்த சட்டவிரோத மண் அகழ்வு அண்மைக் காலமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

இதனால் அப்பகுதிகளில் உள்ள குடிமனைகள் வெள்ள அபாயங்களை எதிர்நோக்கியுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (தி-51)

### தம்மிக்க அமரசிங்க கொலை

# வழக்கு விசாரணை சிறைச்சாலையில்

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டித் தலைவர் தம்மிக்க அமரசிங்கா கொலைச் சந்தேக நபர்கள் விசாரணைகளுக்காக நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டமாட்டார்கள் என சிறைச்சாலை ஆணையாளர் புறூம் மர்சூத் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம். 23ஆம் திகதி கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக் கொலைச் சந்தேக நபர்கள் விசாரணைகளுக்காக நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

ஆனால் சந்தேக நபர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்களை நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்ட தினத்தில் இவ் வழக்கு விசாரணைகள் சிறைச்சாலையுள்ளேயே நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி கொலைச் சம்பவத்திற்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படும் தகவல்கள் குறித்து, தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தொடர்பு உள்ளமை நிரூபிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (தி-4)

# கிராம செயலக காரியாலயம் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் விவசாய அதிகாரிகள் ஒரே இடத்திலிருந்து சேவை செய்யும் வகையில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் கிராம செயலகக் காரியாலயங்களை அமைக்க உள்நாட்டு மாகாண சபைகள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அத்துடன் கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து மக்களுக்கு மேலும் சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் கிராமசேவை உத்தியோகத்தர்களுக்கு கடன் அடிப்படையில் மோட்டார்சைக்கிள்களையும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொடுக்கவும் மாகாணசபை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (தி-10)

## சமுர்த்தி அபி.உத்தியோகத்தர் மன்றம் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றங்களைப் புனரமைப்புச் செய்யுமாறு யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரகுமார் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டமட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மன்றத்தினைப் புனரமைப்பதற்கு வசதியாக எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் புனரமைப்புக் கூட்டங்களை நடாத்தி அறிக்கை அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-75)

## சுழற்சி முறைக் கடன்

(கொழும்பு)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுழிபுரம் கிழக்கு, பனிப்புலம், வரணி மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலிருந்து தலா 10 பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டது.

சுயதொழிலை ஊக்குவிக்கும் யு.என்.எச்.சி.ஆரின் கடன் திட்டத்திற்கான காசோலைகளை வலி. மேற்கு பிரதேச செயலாளர் வழங்கினார். (தி-70)






அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்.

இலங்கையைப் பாதுகாக்க
இந்தியாவுடன் ஒப்பந்தம்

மீண்டும் சூடு பிடிக்கும்
ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு

ஆலடி மாநாடு

வியாசரின் பதில்கள்

கே.வி.குணசேகரம் எழுதும்
கல்தூண்கள்...
(தொடர்கதை)

மற்றும் பல அம்சங்களுடன்
வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள்
உள்ளங்களில் ஒலிப்பது

# சங்குநாதம்

விலை ரூபா. 16.00

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் கணிப்பீடும் மதிப்பீடும் ஓர்நோக்கு

1998 ஆம் ஆண்டு புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இலங்கையில் நடைமுறைப்படுத்தத் தொடங்கிய காலத்தில் இருந்து பாடசாலைகளில் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. இன்று இது க.பொ.த. உயர்தரத்திலும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. எனவே தரம் 1ல் இருந்து தரம் 13 வரையான வகுப்புக்களில் இத்திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பாடசாலைகளில் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அமுலாக்கம் செய்வதில் தரம் 1 தொடங்கி 9 வரையான தரங்களில் தேசியக் கல்வி நிறுவன வழிகாட்டலிலும் தரம் 10 தொடங்கி தரம் 13 வரையான தரங்களில் தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வழிகாட்டலிலும் இது அமுலாக்கப் படுகின்றது.

பாடசாலைகளில் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கல்விசார் ஊழியர்களிடையே (Acadamic Staff) காணப்படும் தெளிவின்மை கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக கல்விசார் சமூகத்தினரிடையே காணப்படும் எதிர் மனப்பாங்கு, கணிப்பீட்டிற்கும், மதிப்பீட்டிற்கும் இடையேயான மயக்கம், கணிப்பீட்டினை மேற்கொண்டாலும் பிள்ளைகள் இறுதியில் மதிப்பீட்டிற்குத் தானே செல்லுகின்றார்கள் என்ற (G.C.E.O/L, A/L) வாதத்தினை முன்வைக்கும் சில பிரபல்ய பாடசாலையைச் சேர்ந்த சமூகத்தினரின் தவறான கற்பிதம், கணிப்பீட்டினை பாடசாலை மட்டத்தில் அமுலாக்கும். சிலரிடையே காணப்படும் ஆழமற்ற பார்வை (Lack of Sound Knowedge of Assesment) போன்ற இது தொடர்பான பிரச்சினைகளுக்கு இக்கட்டுரையாசிரியர் இக்கட்டுரையின் மூலம் பதிலளிக்க முயற்சிக்கின்றார். கட்டுரையாசிரியரின் நோக்கம் கணிப்பீடு தொடர்பாகக் காணப்படும் இப்பிரச்சினைகளுககுத் தெளிவான விளக்கமளிபபதன் மூலம் இதில் ஈடுபட்டு இருக்கும் அனைவரும் எதிர்காலத்தில் நேர் மனப்பாங்குடையோராக (Positive attitute) மாற முடியும் என்பதே.

**கணிப்பீடும்**
**மதிப்பீடும்**

கும் இடையிலான மயக்கத்தினை தெளிவுபடுத்துதலின் வாயிலாக என்னால் கணிப்பீடு தொடர்பாக கல்விச் சமூகத்தினரிடையே காணப்படும் பிரச்சினைகள் என முன்வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு விடைகள் இயல்பாகக் கிடைக்கும் என்பதினால் அது தொடர்பான பிரச்சி னையை முதற் கண் எடுத்து நோக்க விரும்புகின்றேன்.

கல்விச் செயன் முறையில் கற்றல் - கற்பித்தல் - மதிப்பீடு (Learning - Teaching - Evaluation) என்றவொரு பரிசோதனை கலாசார முறையில மேலேயுள்ள மூன்று விடயங்கள் முக்கியமாக இருந்தன. கணிப்பீட்டு கலாசாரத்திற்குள் நாம் வந்தபோது இந்த மூன்று நான்காக மாறிவிட்டது. அதாவது கற்றல் - கற்பித்தல் - கணிப்பீடு - மதிப்பீடு (Learning - Teaching - Assesment - Evaluation) ஆகவே இங்கு புதிதாகப் புகுந்த கணிப்பீடு என்றால் என்ன? ஒரு கற்பித்தல் கற்றல் செயன் முறையில் எதிர்பார்க்கப்படுவது யாதெனில் பிள்ளையிடம் நடத்தை மாற்றம (Behaviour Changes) நடத்தை மாற்றம் என்பது அறிவு + மனப்பாங்கு + திறன் என்பவற்றில் ஏற்படும் மாற்றமாகும். இதனை இவ்வாறு எழுதலாம். **Behaviour Change =**

**K + A + S**
**K = Knowedge**
**A = Attitute**
**S = Skill**

இவ்வாறு இருந்துவந்த இந்த சமன்பாட்டினை தேர்ச்சி மைய (Competency Based) அடிப்படையில் 5ஆக விரித்துள்ளார்கள்.

அதாவது நடத்தை மாற்றமானது தேர்ச்சி மையமானதாக இருக்கவேண்டும். வாழ்க்கைக்கு கற்றதினை பிரயோகிக்கக் கூடியவராக இருக்கவேண்டும். அறிவுத் தொகுதியொன்றினைப் பெற்றவர் அதனை மற்றவர்களுடன் பங்கெடுத்து பிரயோகித்து வாழ்பவராக இருக்கவேண்டும். அத்

தினையே தேர்ச்சி (Competency) என அழைக்கின்றோம். தேர்ச்சி மையமான சமன்பாடு பின்வரும 5 விடயங்களைக் கொண்டதாக இருக்கும். அதாவது,

நடத்தை மாற்றம் = அறிவு + மனப்பாங்கு + திறன் + பிரயோகம் + புத்தாக்கம்.

**(Behaviour Changes = Knowedge + Attitute + Skill + Practice + Innovation)**

## பிரயோகமும் புத்தாக்கமும்

ஆங்கிலத்தில் **Inter Personal Competency** எனக் கூறுவர். கற்றலின் போது பிள்ளைகளிடம் மேலேயுள்ள 5 விடயங்களும் ஏற்பட வேண்டும். இதனை 5 நியதிகள் (Criteria) என அழைப்பர்.

நடத்தை மாற்றம் இந்த 5 நியதிகளின் அடிப்படையில் அமைய வேண்டும். அவ்வாறு ஏற்படுகையில் அது பிள்ளைக்கு தேர்ச்சியினை (Competency) வழங்கும். இந்த 5 நியதிகளை பிள்ளைகளிடம் வழங்குவதற்கான நிகழ்ச் சித்திட்டமே கணிப்பீடாகும். (**Assesment programe**)

எனவே கல்விச் செயன் முறையில் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் - கணிப்பீடு - மதிப்பீடு என்ற செயல் ஒழுங்கினைப் பின்பற்ற வேண்டும். கணிப்பீட்டினை மேற்

டிற்குச் செல்லவேண்டும். கணிப்பீடு என்பது நியதிகளை அடிப்படையாகக் கொண்டு செயல் ரீதியான (**Action**) கற்றல் கற்பித்தல் கணிப்பீட்டு செயன் முறையாகும். கற்றல் கற்பித்தலின் போது பிள்ளையிடம் காணப்படும் பலம் பலவீனம் என்பதினை கண்டறியவேண்டும்.

பலத்தினை பாராட்டவும் பல வீனத்தினை நீக்கவும் பின்னூட்டல் செய்யவேண்டும். (**Feed back**) பின்னூட்டல் செய்யப்படாத கணிப்பீட்டு வேலைத்திட்டம் கணிப்பீடாகக் கருதப்படமாட்டாது. இயலாமையைக் கண்டுபிடித்து அதனை நீக்கும் வழிமுறையே கணிப்பீடாகும். கணிப்பீடு என்பது பிள்ளையைக் குறித்து ஓர் அபிவிருத்தி சார் நுட்ப முறையாகும். எனவே ஒரு பாடத்தில் ஒரு தவணையில் பிள்ளை பல முறை கணிப்பீட்டிற்குள்ளாகவேண்டும். அது ஆசிரியர் பிள்ளையின் அருகிருந்து கண்காணிப்புச் செய்வதாகும். (**Monitaring**) கணிப்பீட்டிற்குட்பட்ட பிள்ளைகள் நியமம்சார் அடிப்படையில் மதிப்பீட்டிற்குட்படுத்தலாம். (**If We Assess Them only We Can Evaluate Them**)

எனவே கணிப்பீடு என்பது கற்றல் கற்பித்தல் என்பவற்றுடன் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ள விடயம். வேறுவகையில் கூறுவதாயின் கற்றலை மேம்படுத்தவும் கற்பித்தலை வினைத்திறனுடன் மேற்கொள்ளவுமான நிகழ்ச்சித்திட்டமே கணிப்பீடாகும்.

ஆசிரியர் கணிப்பீட்டின் போது தனது பாத்திரத்தினை (**Role play**) **Transmission** முறையில் இருந்து **Transformation** முறைக்கு மாற்றுகின்றார். **Transformation** முறையில் ஆசிரியர் கற்பிப்பதில்லை. அவர் உதவுபவராக அல்லது மாணவர்க்கு தேவைப்படும போது உதவும் வள அணியினராக (**Resource person**) பாத்திரமேற்கின்றார்.

எனவே கல்விச் செயன் முறையில் **Transmission - Transaction** பாத்திரங்களை ஏற்ற ஆசிரியர் **Transformation** னுக்கான பாத்திரத்தினை இங்கு ஏற்றுச் செயற்படுவார். இதனால் கணிப்பீடு என்பது பலரால் நோக்கப்படுவது போல் தனியே மதிப்பீட்டு செயற்பாடுடன் அல்லது பிள்ளையை கணிப்பீடு செய்வதற்கான ஒரு உத்தியாக மட்டும் கருதலாகாது.

கணிப்பீட்டிற்குள்ளாகும் பிள்ளை நியமம்சார் பிரிசோதனை முறைக்கு இறுதியில் உட்படுத்தப் படல்வேண்டும். ஏனெனில் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் - கணிப்பீடு என்ற செயலொழுங்கில் பிள்ளையிடம் எதிர்பார்த்த நியதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா அவரின் இயலுமை இயலாமை என்பனவற்றினைக் கண்டறிய கணிப்பீட்டினை மேற்கொண்டவர் பின்னூட்டலின் பின்னர் அவரினை மதப்பீட்டுக்குள்ளாக்குதல் அவசியம்.

எனவே கணிப்பீட்டிற்குட்படுத்தப்பட்ட பிள்ளைகளை மதிப்பீட்டிற்குட்படுத்தப்படவேண்டும். எனவே கணிப்பீட்டுக் கலாசாரமொன்றில் பிள்ளை கற்றலில் ஈடுபடும் போது அதன் பலவீனங்கள் கண்டறியப்பட்டு அது களையப்பட்ட பின்னர் அடுத்தகட்ட கற்றலுக்கு நகரவேண்டும். இதனை **Developmental Method** என்பர். கணிப்பீடுகளில் சிறப்பாகக் காணப்படும் பிள்ளைகள் மதிப்பீட்டின்போது உயர்ந்த புள்ளிகளைப் பெறுவர். எனவே கணிப்பீடு என்பது நியதிகளை அடிப்படையாகக் கொண்டதும் அது கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியரின் பங்கெடுப்புடன் நிகழும் ஒரு கண்காணிப்பு (**Monitaring**) செயற்பாடாகும். இவ்வாறு ஆசிரியர் தனது பாட அலகுகளின் போது பிள்ளையை பல தடவைகள் கணிபபீட்டிற்குட்படுத்துவார். கணிப்பீட்டின் போது பிள்ளையிடம் காணப் படும் பலவீனத்தினைக் களைய முயற்சிப்பார். அதற்கான உதவும் முறைகளை வழிகாட்டலை வழங்குவார். இவ்வாறு ஒரு ஆசிரியர்

எ.சி.ஜோர்ஜ்

**கணிப்பீடும்**
**மதிப்பீடும்**

கணிப்பீட்டிற்கும் மதிப்பீட்டிற்

கெடுத்து பிரயோகித்து வாழ் பவராக இருக்கவேண்டும். அத் தகையவொரு நடத்தை மாற்றத்

செயல் ஒழுங்கினைப் பின்பற்ற வேண்டும். கணிப்பீட்டினை மேற் கொண்ட ஆசிரியரே மதிப்பீட்

தவும் கற்பித்தலை வினைத்திற னுடன் மேற்கொள்ளவுமான நிகழ்ச் சித்திட்டமே கணிப்பீடாகும்.


எ.சி.ஜோர்ஜ்
யாழ். கல்விவலயம்


தொடர்ச்சியாக பிள்ளையின் பலம் பலவீனத்தினை கணிப்பீட்டிற்குள் ளாக்கும் போது அது குறிப்பிட்ட 5 நியதிகளைக் கொண்டதாக அமையும். இவ்வாறு சிறப்பான கணிப்பீட்டிற்குள்ளான பிள்ளை நியமம் சார் மதிப்பீட்டின் போது உயர்ந்த புள்ளிகளைப் பெறும். எனவே ஒரு கல்விச் செயன் முறையில் பிள்ளை இறுதியாக மதிப்பீட்டிற்குள்ளாகும். எனவே பிள்ளையை மையமாக வைத்து செயல்சார் முறையில் தேர்ச்சி களைப் பெற்றுக்கொள்ளும் வகை யில் பிள்ளையை கணிப்பீட்டிற் குள்ளாக்குதல் அவசியம். அதன் போது நல்ல அம்சங்களை பாராட்டு தலுடன் இயலாமைகளுக்கு பரி காரம், வழிகாட்டல், ஆலோசனை என்பன உடனடியாகக் கிடைக்க வழிசெய்வதே கணிப்பீடாகும். இது மிகவும் சனநாயக ரீதியான செயற் பாடு. நேர் கணிய அணுகுமுறை பங்குபற்றல் தன்மைவாய்ந்தது. பரிசோதனைக் கலாசாரத்தில் இருந்து கண்காணிப்புக் கலா சாரத்துக்கு வருவதாகும்.

எனவே ஆசிரியர் தனது கல்விச் செயலொழுங்கில் கற்றல் - கற்பித்தல் -கணிப்பீடு - மதிப் பீடு என்ற முறையில் நேர்கணிய மனப்பாங்கினைக் கொண்டவராக செயற்படவேண்டும்.

# ஜே. வி. பி. - ஸ்ரீ. சு. க. கூட்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவும்

## கல்விமான்கள் கருத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பியினருக்கும் இடையே ஏற்படவிருக்கும் கூட்டமைப்பு தற் போதைய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழி அமைத்துக் கொடுக்குமென கொழும்பு பல் கலைக்கழகத்தின் ஸ்ரீ பாலி வளா கத் தலைவர் கலாநிதி சூரவீரசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் குறைபாடு களை இரு கட்சிகளும் நன்கு உணர்நது கொண்டுள்ளமையினால் பொருளாதாரம், கலாசாரம், அரசி யல் ஆகியவற்றை விருத்தி செய் யவும் நாட்டில் நிரந்தர சமாதா னத்தை ஏற்படுத்தவும் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப் பையும் வழங்கவேண்டும் என்று அவர் அனைத்துக் கட்சிகளையும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, லங்கா சம சமாஜக கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன், ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில ஏற்படவுள்ள கூட்டமைப் புத் தொடர்பாக ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களின் அபிலாஷைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற இரு கட்சிகளும் முன்வரவேண்டும்.

அத்துடன், இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பொது ஜன ஐககிய முன்னணி முன்வைத்த யோசனையை ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளுமானால், இக் கூட்ட மைப்பை எமது கட்சி ஆதரிக்கும்.

அதுமட்டுமன்றி ஜே.வி.பியின ரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் ஒன்றிணைந்த போக்கைக் கடைப்பிடிக்க வேண் டும் என்று கூறினார்.

பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜி.எஸ். வர்ரட்ண, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி க்கும் ஜே.வி.பியினருக்கும் இடை யிலே ஏற்படவுள்ள கூட்டமைப்புத் தொடர்பாகக் கருத்துக் கூறுகை யில்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நன்மை தரும் செயல்கள் எதை யும் செய்யவில்லை என்பதனால் ஜே.வி.பியினருக்கும் - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே ஏற்படவுள்ள கூட்டமைப்பை தான் வரவேற்கிறேன் என்றார்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் நளின் டிசில்வா இக் கூட்டமைப்புப் பற்றி கருத்து வெளியிடுகையில்,

தேசாபிமான சக்திகளுக்கு இடையே கூட்டமைப்பு ஏற்படுவதால மக்களின் அபிலாஷைகள் நிறை வேற்றப்படும் என நான் நம்புகிறேன்.

1956 ஆம் ஆண்டில் மக்கள் வென்றெடுத்த புரட்சியின் முக்கிய முன்னேற்றமே இன்றைய கூட்ட மைப்பு உருவாக்கம் என்று தெரி வித்தார்.

(தி-60,10)

# போரை எதிர்கொண்ட பெண்கள் அரசியலையும் வழிப்படுத்த வேண்டும்

## பேராசிரியர் சித்திரலேகா தெரிவிப்பு

(கொழும்பு)

பெண்கள், வீடு குடும்பம் என்ற சிறைகளில் இருந்து வெளியே வந்து சமாதான நடவடிக்கை களி லும் தங்களின் பங்களிப்பை வழங்கவேண்டுமென கிழக்குப் பல்கலைகழக பேராசிரியர் சித்திர லேகாமௌனகுரு தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில்,

தமிழர் பண்பாட்டில் பெண்கள் அடக்கி ஒடுக்கப்படுகிறார்கள். வீடு, குடும்பம் என்ற சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் அவர்களுக்கு உலகில் எங்கே என்ன நடக்கின்றது என்பது பற்றி எதுவும் புரியா திருக்கின்றார்கள்.

இந் நிலைப்பாடு தற்போது மாற்றமடைந்து வருகின்ற போதும், முழுமையாக பெண்கள் விடுதலை பெறவில்லை.

பெண்களை வெளியே செல்ல விட்டால் அவர்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தால், குடும்பம் சின்னாபின்னமாகி விடுமே எனற அச்சநிலை ஏற்படுவதுதான் இதற்கு முக்கிய காரணம்.

பெண்கள் குடுமபத்தில் இருந்து வெளியே வரவேண்டும் என்பதை விட, அவர்கள் அந்த சிறைகளில் இருந்து விடுதலைபெற்று சமூக, சமய அரசியல் நடவடிக்கைகளில் பங்களிப்புச் செய்யவேண்டும் உலகில் நடைபெறும் நிகழ்வுகளை அவ தானிக்க அதில் பங்குகொள்ள அவர் களுக்கு வாய்ப்பு வழங்கப்படவேண்டும்

இந்தியாவில் கூட தற்போது பெண்கள் விடுதலை பெற்றுள்ளார் கள். இந்தியாவிலேதான் பெண் கள் அதிகமாக குடும்பம் என்ற சிறைச்சாலையில் சிறைவைக்கப பட்டு சித்திரவதை செய்யப்பட்டுள் ளார்கள். ஆனால் அந்நிலை தற் போது அங்கு மாறி பெண்களே அதிகமாக அரசியலிலும், சமூக சமய அமைப்புக்களிலும் அங்கம் வகிக்கின்றார்கள்.

ஆனால் இலங்கை சனத்தொகை யைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு 50 வீதமானவர்கள் பெண்களாக இருக்கின்றார்கள். அவர்களில் 4சத வீதமானவர்களே இன்று அரசியல் மற்றும் சமூக சமய பணிகளில் சுதந திரமாக ஈடுபடுகின்றார்கள்.

இதற்கு முக்கிய காரணம் சமூக மட்டத்தில் உள்ள சில மூட நம் பிககைகள் குடும்பங்களில் ஏற்படும் புரிந்துணர்வின்மைகள் தான்.

இதேவேளை, பெண்களுக்கும் சம உரிமைகளையும் சம அந்தஸ் தையும் வழங்கி அவர்கைளயும் அரசியலில ஈடுபடுத்தி அவர்களின் ஆளுமையை திறமையை வெளிப் படுத்தி சாதனைகளை நிலைநாட் டிய பெருமையை தமிழீழ விடு தலைப்புலிகள் பெற்று வருகின் றார்கள் என்பது இங்கு முக்கிய மாக குறிப்பிடக்கூடிய விடயம்.

இவை தவிர எமது நாட்டின் ஜனாதிபதியாக சந்திரிகா குமார துங்கா இருக்கின்றார். அவரிடமே நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் பொறுப்பும், யுத்தத்தை ஆரம்பிக்கும் பொறுப்பும், அதனை நிறுத்தும்பொறுப்பும் தற்போது இருக்கின்றது.

தற்போது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் எல்லாப் பிரச்சினையும் நீங்கி விட் டதாகவோ அல்லது சமாதானம் கிடைத்து விட்டதாகவோ கருத முடியாது.

கடந்த 20வருட காலமாக இடம்பெற்ற போரினால் சமூகங் களிடையே பிளவுகள் ஏற்பட்டு, அச்சுறுத்தல்கள், புரிந்துணர்வு வின்மைகள் முரண்பாடான கருத் துக்கள் என்பன தோன்றியுள்ளன.

இதனால் சமூகமட்ட மக்களுக்கு இடையில் சமூக கட்டமைப்புக்களுக் கிடையில் சமாதான உடன்படிக்கை களை கைச்சாத்திடவேண்டி இருக் கிறது.

எனவே அரசியல் நடவடிக்கை களில் பெண்கள் இறங்கும்போது அதிக சவால்களையும் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அத்தைய நிலை யில் அவர்களிடம் ஓர் துணிவு ஏற் படும்.

இதனால் எதையும் சமாளிக் கக்கூடிய வல்லமை ஏற்படுகின் றது. இதனை பாரகின்ற சிலர் சர்வாதி காரமாக அந்தப் பெண் நடப்பதாக கூட கற்பனைசெய்து விடுகிறார்கள்.

பெண்களின் துணிவை வளர்ப் பதறகும் அவர்களின் திறமைகளை வளர்ப்பதற்கும் அரசியல் நல்ல தொரு அடித்தளமாக அமைகின்றது.

இவை தவிர சமூகத்தில் பல் வேறு நடவடிக்கைகளாலும் அதி கம் பாதிக்கப்படுபவர்கள் பெண் கள் தான். குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் அதிகமான பெண்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்களிற்கு சுமை கள் வேதனைகள் அதிகரித்துள் ளன. பலர் கொலை மற்றும் பாலி யல் வன்முறைகளால் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இத்தகைய நிலையில் அவர் களிடையே ஓர் விரக்தி, வாழ்க்கை யில் வெறுப்பு ஏற்படுகின்றது. பெண களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்குடன் அதற்கு வழிதேடும் நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்ற ஓர் உணர்வு ஏற் படுகின்றது. அதன் விளைவாகவே இன்று போரட்டத்தில் பெண்கள் இணைந்து கொள்கின்றார்கள்.

எனவே பெண்களால் எதை யும் சாதிக்க முடியும், எதையும் செய்யமுடியும் என்பதையும் இதன் மூலம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

போராட்டத்தில் இறங்கி சாத னைகளைப படைத்த எமது பெண் கள் அரசியலிலும் இறங்கி தமது சாதனைகளை நிலைநாட்ட வேண் டும். பாராளுமன்றம் முதல் பல் வேறு இடஙகளுக்கும் அது செல்ல வேண்டும் என்றார். (தி-60,10)

## அப்பிள் பழங்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டு சந்தையில் விற்கப்படும் உணவுப் பொருட் கள் மீது நேற்று சுகாதாரப் பரி சோதகர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனைகளின்போது பழு தடைந்த நிலையிலுள்ள 114அப் பிள் பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, இவ் அப்பிள் பழங்கள அனைத்தையும் உடனடி யாக அழிக்குமாறும், இது போன்ற செயற்பாடுகள் இனி இடம்பெறாத வண்ணம் அவதானமாக இருக்கு மாறும் வியாபாரிகளுக்கு அறிவு றுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

(தி-18)

## நிர்வாகசபை தெரிவும் பொதுக் கூட்டமும்

(இருபாலை)

இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவின் நடப்பாண்டுக் கான நிர்வாக சபைத் தெரிவும், பொதுக் கூட்டமும் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை அமைப் பின் கேட்போர் கூடத்தில் வைத் திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளன.

(தி-84)

# ஜே. வி. பி. தலைவர் நாடு திரும்புகிறார்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி யின் தலைவர் சோமவன்சஅமர சிங்க நாடு திரும்பவுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின ருக்கும் இடையே நாளை செவ் வாய்க்கிழமை கூட்டமைப்பு ஒப்பந தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள் ளது.

உள்ளூர், மற்றும் வெளிநாட்டு உறவுகள் சம்பந்தமாக 5 முக்கிய மான கோட்பாடுகள் அடிப்படை யில் அமைந்துள்ள இவ் ஒப்பந் தம். கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து கைச்சாத்திடப்படவுள் ளது.

இத தினத்தில் இலங்கை முழு வதும் கொண்டாட்டங்கள் பல ஏற் பாடு செய்யப்பட்டுள்ளன. இவற் றில் கலந்து கொள்வதற்காகவே சேமவன்ச அமரசிங்க இலங்கை வருகிறார். (தி-4)

# துடுப்பாட்டப் போட்டிகளில் மகாமாரி, சென்ஜேம்ஸ் சம்பியன்

ஊர்காவற்றுறைப் பிரதேச மட்ட விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண், பெண்களுக்கான துடுப்பாட் டப் போட்டிகளில் நாரந்தனை மகாமாரி விளையாட்டுக்கழகம் ஆண்கள் பிரிவிலும், ஊர்காவற் றுறை சென்ஜேம்ஸ் விளையாட் டுக்கழகம் பெண்கள் பிரிவிலும் யாட்டுக்கழகத்தினர் நிர்ணயிக்கப் பட்ட 5ஓவர்கள் முடிவில் 3விக் கெற் இழப்பிற்கு 20ஓட்டங்களை மட்டுமே பெற்றனர். இதற்கு பதி லளித்தாடிய சென்ஜேம்ஸ் விளை யாட்டுக்கழகத்தினர் 3.4ஓவர் முடி வில் விக்கெற் இழப்பின்றி 21ஓட் டங்ளைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டனர்.

(தி-68)

விளையாட்டுச்

# குற்றச்சாட்டை எதிர்த்து றியோபேடினன் மேன்முறையீடு

இங்கிலாந்தின் பிரபல கால்பந் தாட்ட கழகம் மன்செஸ்டர் யுனைட் டட், அதன் முன்னணி கால்பந் தாட்ட வீரர் றியோபேடினன் மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் குறித்து மேன்முறையீடு செய்யப்போவ தாக பேடினன் அறிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஊக்கமருந்துப் பாவனை தொடர் பான குற்றச்சாட்டின் மருத்துவப் பரிசோதனைக்கு றியோ பேடினன் தொடர்பான மருத்துவப் பரிசோத னைக்கு சமூகமளிக்காத இவர்மீது விதிக்கப்பட்டுள்ள போட்டித் தடை இம்மாதம் 20ஆம் திகதி முதல அமுலுக்கு வருகிறது.

இதேவேளை, இப் போட்டித் தடை அமுக்கு உட்படுத்தப்பட் டால் இங்கிலாந்தில் ஆரம்பமாக வுள்ள பருவகால கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலும், யூறோ 2004ஆம் ஆண்டு கால்பந்தாட்டப்

ஆண்கள் பிரிவிலும், ஊர்காவற்றுறை சென்ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் பெண்கள் பிரிவிலும் சம்பியன்களாக வந்துள்ளன.

ஊாகாவற்றுறைப் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 6பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவின் இறுதிப்போட்டியில் நாரந்தனை மகாமாரி விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகத்தை 3ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு சம்பியன் பட்டத்தை தனதாக்கிக்கொண்டது.

இப் போடடியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மகாமாரி விளையாட்டுக்கழகம் 4விக்கெற் இழப்பிற்கு 45ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதற்கு பதிலளித்தாடிய காந்திஜி விளையாட்டுக் கழகத்தினர் 5ஓவர் முடிவில் 4 விக்கெற் இழப்பிற்கு 42ஓட்டங்களைப் பெற்றனர்.

ஊர்காவற்றுறைப் பிரதேச மட்டததில் முதல் தட்வையாக நடாத்தப்பட்ட பெண்களுக்கான துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை சென் ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய நாரந்தனை அண்ணா விளையாட்டுக்கழகத்தை 5விக்கெற்றுக்களால் வெற்றிகொண்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அண்ணா விளை

# விளையாட்டுச் செய்திகள்

அண்மையில் நடைபெற்ற ஊக்கமருந்துப் பாவனை தொடர்பான குற்றச்சாட்டின் மருத்துவப் பரிசோதனைக்கு றியோ பேடினன் சமூகமளிக்காததினை அடுத்து எட்டுமாத கால போட்டித்தடை இவர்மீது விதிக்கப்பட்டது.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கடந்த ஆண்டு செப்ரம்பர் 23ஆம திகதி ஊக்கமருந்துப் பாவனைடால் இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள பருவகால கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளிலும், யூறோ 2004ஆம் ஆண்டு கால்பந்தாட்டப் போடடியிலும் கலந்துகொள்ளமுடியாத நிலை ஏற்படும்.

இதன் காரணமாகவே தான மேன்முறையீடு செய்யப்போவதாக பேடினன் தெரிவித்துள்ளார். ஊக்க மருந்துப் பாவனைக் குற்றச்சாட்டின் மருத்துவப் பரிசோதனைக்கு சமூகம் அளிக்க முடியாமல் போனதற்கு பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதுடன், 50ஆயிரம் இஸ்ரேலிங் பவுண்களையும் அபராதமாக தான் செலுத்தியதாக அவர் தெரிவித்துளளார். மருத்துவப் பரிசோதனைக்கான நிர்ணயிக்கப்பட்ட திகதியை மறந்து விட்டதனாலயே இதற்குத் தன்னால் சமூகமளிக்க முடியாமல் போனதாகவும் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை எதிர்த்து மேன் முறையீடு செய்யவுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (தி-68)

# 4 ஓட்டங்களால் பாக். அணி நியூசிலாந்திடம் தோல்வி

பாகிஸ்தான் அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான ஒரு நாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் நியூசிலாந்து அணி 4ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியை வெற்றிகொண்டுள்ளது. இதன் மூலம 5போட்டிகள் கொண்ட இவ் ஒருநாள் சர்வதேச போட்டித் தொடரை 4:1என்ற கணக்கில நியூசிலாந்து அணி வெற்றிகொண்டுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில் 8விக்கெற் இழப்பிற்கு 307ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் ஹமீஸ் மார்சல் 84ஓட்டங்களையும், கிரேக மக்மிலன் 81ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இதில் நியூசிலாந்து அணியின் முதல் 3 விக்கெற்றுக்களும் சொற்ப ஆட்டத்தில் விழுந்த போதும் 4வது விக்கெற்றுக்கு இணைப்பாட்டமாக ஹமீா மார்சலும், கிரேக் மைக்மிலனும் 157ஓட்டங்களைப் பகிாந்துகொண்டு தமது அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றனர். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் சௌயிப் அக்தார், அசார்மமூட், முகமட் சமி ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் வெற்றி வாய்ப்பு கடைசி 3பந்துவீச்சுக்கள் உள்ளபோது தகர்ந்தது. 49.3 ஓவர் முடிவில் அனைத்து விக்கெற்றையும் இழந்த பாகிஸ்தான் அணி 303ஓட்டங்களைப்பெற்று 4 ஓடடங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவிக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அ்துல் ரஸாக் 89ஓட்டங்களையும், இன்சமாம்-உல்ஹக் 67ஓட்டங்களையும், மெயின்கான் 52ஓட்டங்களையும், யசீட்ஹமீட் 48ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் ஜேக்கப் ஓரம் மற்றும் கெயில் மில்ஸ் ஆகியோர் தலா 2விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர். (தி-68)

## உதைபந்தாட்ட போட்டி

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 24, 25, 31ஆம் திகதிகளில் காலை 8.30மணிக்கும் அடுத்த மாதம் முதலாம் திகதி பி.ப.4.00மணிக்கும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (தி-70)

# விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியை "பொங்குதமிழ்" உலகிற்கு வெளிப்படுத்தியது

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

எமது போராட்டத்தின் உண்மைத் தன்மையை, மக்களின்



எழுச்சியை உலகிற்கு வெளிப்படுத்திய மிகவும் உன்னதமான நிகழ்வாகப் பொங்குதமிழ் நிகழ்வு அமைந்துள்ளது. தமிழ் மக்களின் உள்ளங்களில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தி, சர்வதேசத்தின் கவனத்தை எமது பக்கம் திருப்புவதற்கு இது உதவியது.

இவ்வாறு தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வின் 3ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகை யில்,

பொங்கு தமிழ் நிகழ்வை தொடர்ந்தும் பெருமெடுப்பில் முன்னெடுத்துச் சென்று, எமது மக்களின் அபிலாஷைகளை சிங்கள அரசுக்குத் தெரிவிப்பதோடு, உலகெங்கும் அதனைப் பறைசாற்ற வேண்டும்.

சிங்களப்பேரினவாதிகள் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகள், சமாதானத்திற்கெதிரானவர்கள் என்று சர்வதேசத்திற்கு பிரசாரம் செய்தனர். இப் பிரசாரங்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்து இலங்கைத் தீவில் தமிழர் என்ற இனம் அடக்கப்பட்டுவரும் உண்மையை உலகிற்கு வெளிப்படுத்தியது பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வே.

தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தேக்க நிலைமை காணப்படுகின்றது. இது தமிழ் மக்களின் மனதில் விடுதலைப்புலிகள் போரைத்தொடங்கி விடுவார்களா, பேச்சுவார்த்தையில் இருந்து விலகி விடுவார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால் எமது தலைவர், அந்த விடயத்தைச் செய்ய முற்பட்டாலும் நம்பிக்கை வைத்தும், நிதானத்துடனும், அர்ப்பணிப்புடனும் தான் செய்ய வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அதேபோல் இச் சமாதான நடவடிக்கையாலும் நாம் நம்பிக்கையுடனும், பொறுமையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு வருகிறோம்.

தமிழ் மக்களாகிய அனைவரும் ஒன்றாக ஒரே குரலாக எமது எழுச்சியை வெளிப்படுத்துவோமானால், நாம் எமது விடுதலையை வென்றெடுக்கலாம் எனவும் தமிழினி மேலும் தெரிவித்தார். (இ-3)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கையெழுத்துப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தினால் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருப்பதனால் மக்கள் எதிர்கொண்டுள்ள பாதிப்புக்களை கருத்தில் கொண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக்கோரியும்,

. இப்பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் பலர் கைது செய்யப்பட்டு அரசியல் கைதிகளாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட் டுள்ளவர்களை விடுவிக்க கோரியும் இக் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இக் கோரிக்கை அடங்கிய மகஜருக்கு மக்கள் செலுத்தும் ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான கையெழுத்துகள் திரட்டப்படவுள்ளன. இம்மகஜர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கும் அனுப்பிவைக்கபடவுள்ளது.

இக் கருத்தரங்கில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், அ.விநாயகமூர்த்தி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு இது குறித்த தமது ஆதரவை வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-4)



### நிவாரணக் கொடுப்பனவு

(தொல்புரம்)

வலி. மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஆண்டில் வழங்கப்படாமல் இருந்த பாதிக்கப்பட்டோருக்கான தற்செயல் நிவாரணக்கொடுப்பனவு தலா 7 ஆயிரம் ரூபா வீதம் 15பேருக்கு வலி.மேற்கு பிரதேச செயலரின் துரித முயற்சியின் பயனாக அண்மையில் வழங்கப்பட்டது (தி-70)

### சந்தேக நபர்கள் இனங்காணல்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுத் தலைவர் தம்மிக்க அமரசிங்கவின் கொலை சம்பந்தமாக 6 சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் நுகொட தெரிவித்துள்ளார்.

தம்மிக்க அமரசிங்கவை கொலை செய்ததாக கூறப்படும் நபர் வழங்கிய தகவலை அடிப்படையாக வைத்தே இந்த 6 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுவருவத்ாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

### அமெரிக்க - இலங்கை வர்த்தக சபை

(கொழும்பு)

இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையே வர்த்தக சபை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதனை உருவாக்குவதில் அமெரிக்கா முக்கிய பங்கை வகிக்கவுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவே இச் சபை அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, தென் ஆசியப் பிராந்தியத்தில் நல்லதொரு வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள இச்சபை பயனளிக்கும் என அமெரிக்கா கருத்துத் தெரிவித்துள்ளது.

இதனால் நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் முன்னேற்றம் ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)

## எட்டு புலி உறுப்பினர்களுக்கு 30 வரை விளக்கமறியல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் 4 பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட 8பேரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி அக்கரைப்பற்றில் இருந்து மட்டக்களப்புக்கு பிக்கப் வாகனம் ஒன்றில் ஆயுதங்களைக் கடத்திச் சென்றார்கள் என இவர்கள் மீது குற்றம்சாட்டி பொலி ஸார் இவர்களை கைது செய்து மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.

அத்துடன், இவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக கொழும்பில் உள்ள பொலிஸ் விசாரணைப் பிரிவிற்கும் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் மேற்படி 8உறுப்பினர்கள் மீதான விசாரணைகளை அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மேற்கொண்டார்.

சந்தேக நபர்களான 8 விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரின் விளக்கம் தேவைப்படுவதால் அவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் இருக்கவேண்டும் என உத்தர விட்டார். (தி-60, 10)

## கடந்த ஆண்டில் 32 பேர் தொழுநோயால் பாதிப்பு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 32 பேர் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்களத்தின் புள்ளி விபர அறிக்கை ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தொழுநோயால் பாதிக்கப்பட்ட இத் தொகையினரில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், ஏனையோர் வட்டுக்கோட்டை மற்றும் சுழிபுரம் பகுதிகளிலும் உள்ளதாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இந் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு குடாநாட்டில் பரந்த அளவில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகள் நடாத்தப்படவுள்ளன. அத்துடன் இவ்வாண்டின் கடந்த 15 நாள் காலப் பகுதியில் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 பேரும்,கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேரும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்


## வெளிநாடு செல்லும் பெண்கள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு வேலை பெற்றுச் செல்லும் இலங்கைப் பெண்களின் தொகை அதிகரித்து வருவதாக கொழும்பில் உள்ள மகளிர் பணியக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் நிலவும் வறுமை காரணமாக, பல பெண்கள் வீட்டுப் பணிப்

அவர்களில் பலர் வீட்டு உரிமையாளர்களால் துன்புறுத்தப்பட்டு பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.இந்நிலைமையைத் தடுப்பதற்கு அவர்களுக்கு உள்நாட்டிலேயே பல வேலை களைப் பெற்றுக் கொடுக்க தாம் நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் அவ் அறிக்கை



புங்குடுதீவில் அமைக்கப்பட்டுள்ள தியாகி திலீபன் மருத்துவ மனைத் திறப்பு விழாவில் தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் ந. கண்ணன் தேசியக் கொடியேற்றுவதையும்,



...ழ்வில் தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ...ந்தவம் நன்றியுரை வழங்குவதையும், அருகில் யாழ். ...ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பானர் சி. ...ணன், மா. இளம்பிறை மற்றும் டாக்டர் ஏ. பேரின்பநாதன் ...யோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

நாட்டில் நிலவும் வறுமை காரண மாக, பல பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாகப் பணியாற்றச் செல் கின்றார்கள்.

...துள்ள தாகவும் அவ் அறிக் கை யில் சுட் டிக் காட்டப்பட்டுள்ளது.

(தி-60,10)

பிரிவில் 8 பேரும் தொழுநோயி னால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற் றுவருகின்றனர் எனத் தெரியவரு கிறது.

(தி-252)


எமது பயிற்சியகம்

19 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

# கலாலயா

பயிற்சியகம்

(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

யாழ்ப்பாணம்

## மகளிருக்கான மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

★ 3 மாதகால கேக் ஐசிங், உணவுகள் தயாரித்தல், பூவேலை, கைவேலை, Fabric Painting கூந்தல் அலங்காரப் பயிற்சிகள். இத்துடன் இக்காலப்பகுதியில் பிரபல அழகுக்கலை நிபுணர் ஒருவரால் 3 நாள்களுக்கு Facial அழகுக்கலை, முக அழகு சிகிச்சை, தலைமுடி அலங்கரிப்பு, மணப்பெண் அலங்காரம் என்பன மிகக்குறைந்த கட்டணத்தில் பயிற்றுவிக்கப்படும்.

★ 6மாதகால உடை தயாரித்தல் பயிற்சி

சனி, ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 25-01-2004 (ஞாயிறு)

கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்: 26-01-2004 (திங்கள்)

★ பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

✿ மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.30 மணிவரை அறிந்து கொள்ளலாம்.

(C/7188)

இயக்குநர்.

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

(19)

முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் இப் பகுதிகளில் அவர்களின் செல்வாக்கும் மேலாதிக்கமும் ஏற்பட்டிருந்தமைக்கான சில சான்றுகள் உள்ளன. அவற்றிலே பதவியாவில் உள்ள சமஸ்கிருத மொழிச் சாசனம் குறிப்பிடத்தக்கதாகும். 13ஆம் நூற்றாண்டுக்குரிய வரி வடிவங்களிலும் கிரந்த எழுத்திலும் அமைந்துள்ள அச்சாசனம் மேல் வருமாறு உள்ளது.

1.ஸவஸ்தி ஸ்ரீ(★) பௌத்த தர்மாகண்டவிம, 2. லகுனோத்துங்க ரத்னத்ராயிக, 3.ஸ்திதி (ஹ்) சேதுகுலஹ்(★) காந்திலக்ஷ்மியு, 4. ஜ (ஜ்வ) லம் ரத்னராஜித காண்டம் 5. ஸ்ரீமத் ஸ்ரீலோகநாதாஹ்வ (யத), 6. ண்டந(ா) யக காரிதம் ஸ்ரீபதேரிஹ, 7.ஸ்ரீவேளைக்காற நாமாங்கிதம் இத, 8. ம் விஹாரம் ரக்ஷிதும் ஸ்தாபிதும் ஸ்ரீ.

“ மங்கலம் பொலிக! புத்ததருமத்தின் ஒப்பிலாத பண்புகளின் சிகரமான மும்மணிகளைச் சேது குலம் பற்றியுள்ளது. மணிகளால் அலங்கரிக்கப் பெற்ற கரண்டத்தையுடையதான, அழகுடன் பிராகாசிக்கும் இந்த விகாரம் ஸ்ரீபதியின் உலோக நாதன் என்று சொல்லப்படும் தண்டநாயகனால் அமைக்கப்பட்டுள்ளது. (அது) வேளைக்காற விகாரம் எனப் பெயரிடப்பட்டுப் பாதுகாப்பிற்காக (அவர்களிடம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது”

இச்சாசனத்திற் சில முக்கியமான அம்சங்கள் உள்ளன. அதன் ஆரம்பப்பகுதி சேது குலம் என்பதனைப் போற்றிப் புகழ்கின்றது. அது ஒரு பிரமாண்டமான விகாரம் அமைக்கப்பட்டமை பற்றிக் குறிப்பிடுகின்றது. அதற்குக் காரணமாய் இருந்தவன் (உ) லோகநாதன் என்னும் தண்டநாயகன். அவன் வேளைக்காறப் படையொன்றின் நாயகன். விகாரம் வேளைக்காற விகாரம் ( இதம் விஹாரம் வேளைக்காற நாமாங்கிதம்) என்று பெயரிடப்பெற்றது. அந்த விகாரம் வேளைக்காறரின் காவலிலும், அவர்களின் பொறுப்பிலும் விடப்பட்டது. விகாரம் அமைந்திருந்த தானமும் பதவியா நகரம் என்பது குறிப்பிடற்குரியது.

சாசனம் சேது குலத்தினைப் போற்றுவதால் அக் குலத்திற்கும் வேளைக்காறப் படையின் நாயகனாகிய உலோக நாத தண்டநாயகனுக்கும் இடையிலே அமைந்த தொடர்பு உணர்ச்சிபூர்வமானது. அந்தத் தொடர்பினை இரு விதமாக விளக்கலாம். சேது குலம் என்ற வம்சம் ஒன்றின் மேலாணைக்குக் கட்டுப்பட்ட ஒருவனாக உலோகநாத தண்டநாயகனைக் கருதலாம். அன்றே அவன் அந்தக் குலத்தைச் சேர்ந்தவனாதல் வேண்டும். இக்காலத்து இலங்கை வரலாற்றின் அடிப்படையிலே சேது குலம் என்பதை அடையாளம் காண்பது சிரமமற்ற ஒன்றாகும். இலங்கையில் அரசு புரிந்த மன்னரில் ஆரியச்சக்கரவர்த்திகள் மட்டுமே சேது என்பதோடு தொடர்புடையவர் என்பது இங்கு கவனிக்க வேண்டியதார்கும். சேதுகாவலன் என்னும் சிறப்புப்பெயர் அவர்களுக்குரியதாகும். அவர்கள் வெளியிட்ட பெரும்பாலான நாணயங்களிலே சேது என்னும் மொழி பொறிக்கப்பெற்றது. அவர்களின் சாசனங்களிலும் ஸ்வஸ்திஸ்ரீ என்பதற்குப் பதிலான மங்கல மொழியாக அது வழங்கியமை குறிப்பிடற்குரியது. சேது என்பதோடான ஆரியச்சக்கரவர்த்திகளின் தொடர்பு பூர்வீகமானது. அது அவர்கள் யாழ்ப்பாணத்தில் அரச பதவியைப் பெறுவதற்குமுன் ஏற்பட்ட ஒன்றாகும். தேவர் ஆரியச் சக்கரவர்த்தி என்ற பிரதானியொருவனைக் குறிப்பிடும் மாறவர்மன் குலசேகரனது காலத்துத் திருப்புள்ளானிக் கல்வெட்டிலே சேது திருமுகம் என்னும் தொடர் மங்கள வசனமாய் அமைந்துள்ளது. பதவியாச் சாசனம் 13 ஆம் நுற்றாண்டுக்கு உரியதென்பதாலும், அக்காலமளவிலே பதவியா அடங்கிய பகுதிகளிலே பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்த காரணத்தினாலும் அதிலே போற்றப்படும் சேதுகுலம் சேது என்னும் புண்ணிய தலத்தோடு தொடர்பு கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சம் என்பது

வலம்புரியின் அனுசரணையுடன்
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
இராசையா சோமசுந்தரம்
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்
கவிதைப் போட்டி -2004
1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
“தமிழா உனக்கேன் இக்கதி”

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

உங்கள் கவிதைகளை
கவிதைப்போட்டி-2004
வலம்புரி
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த
கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்

அக்காலமளவிலே பதவியா அடங்கிய பகுதிகளிலே பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்த காரணத்தினாலும் அதிலே போற்றப்படும் சேதுகுலம் சேது என்னும் புண்ணிய தலத்தோடு தொடர்பு கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சம் என்பது அனுமானிக்கப்படும். வணிக நகரமாயும் கலாசார மையமாகவும் விளங்கிய பதவியா நகரிலே 11ஆம் நூற்றாண்டு முதலாக வணிக கணத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ள படைகள் இருந்தன. அவை சில சமயங்களிலே அரசருக்கும் சேவை புரிந்தன. பதவியாவிலிருந்த வேளைக்காறப்படையொன்றின் தலைவனான உலோகநாதன் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதரவாளனாக அமைந்திருந்தான் என்பதை இச்சாசனத்தின் மூலமாக உணரமுடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் மேலாதிக்கத்தின் கீழமைந்த இராச்சியத்தை தெமள பட்டணம் என்று நம்பொத்த என்ற சிங்கள நூல் குறிப்பிடுகின்றது. அதிலுள்ள குறிப்பின் மூலமாக அந்த இராச்சியம் யாழ்ப்பாணம் முதலாகத் திருகோணமலை வரை பரந்திருந்தது என்பதனை அறியமுடிகின்றது. நாகர் கோயில், கந்தரோடை, தெல்லிப்பழை, மல்லாகம், காரைதீவு, முள்ளியவளை, திருகோணமலை, வெல்கம் விகாரை( பெரியகுளம்), இலந்தகொடை முதலான ஊர்கள் அந்த இராச்சியத்தினுள் அடங்கியவை என்று அந் நூலிற் கூறப்பட்டுள்ளது.

மத்திய காலத்திலே அவற்றின் பூகோள அமைப்பின் காரணமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் பகுதிகள் கணிசமான முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன. தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்புகள் பெரும்பான்மையும் அவற்றினூடாக நடைபெற்றன. ஆதிகாலம் முதலாக இலங்கையும் தென்னிந்தியாவும் ஒரு வர்த்தக வலயமாக இணைந்திருந்தன. அந்த வலயத்தில் உள்ள கடல்வழி வாணிபத்திலே இலங்கையின் வடபகுதியில் உள்ள துறைமுகங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன. இலங்கையின் பிரதான துறைமுகப்பட்டினம் என்ற நிலையினை அது இழந்துவிட்டபோதும் கரையோரமான கடற்பிரயாணங்கள் மாதோட்டம் வழியாக நடைபெற்று வந்தன. யாழ்ப்பாணக்குடாநாட்டிலே குடிசனத்தொகை பெருகிப் பொருளாதார முயற்சிகள் அபிவிருத்தி அடைந்ததன் பயனாக ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, கொழும்புத்துறை, பருத்தித்துறை ஆகிய துறைமுகங்கள் பெருவளர்ச்சி பெற்றன. வன்னிக்கும் தென்னிலங்கைக்கும் செல்லும் தரைவழியான பாதைகள் கடலேரி வழியாகக் கொழும்புத்துறையுடன் தொடர்பு படுத்தப்பட்டிருந்தன. குடாநாட்டில் உள்ள துறைமுகங்களினூடாகத் தென்னிந்தியாவுடனும் தென்னிலங்கைப் பகுதிகளோடும், கிழக்கிலங்கையில் அமைந்த திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய பிரதேசங்களோடும் வாணிபத்தொடர்புகள் ஏற்பட்டிருந்தன.

(தொடரும்)

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

**அலுவலகப்பாவனைக்கு**

| | |
|---|---|
| | |

**முழுப்பெயர்**.........................

.........................

**தபால் முகவரி**.........................

.........................

**பிறந்த திகதி**.........................

**தே.அ.அ. இல** .........................

**மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.**

..........                ..............................

திகதி                போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை

இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

................                ..............................

திகதி                போட்டியாளர்கையொப்பம்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# செய்தித் துளிகள்

## கற்றல் உபகரணங்கள் கையளிப்பு

(வடலியடைப்பு)

சாவகச்சேரி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள், பணியாளர் ஆகியோரின் பிள்ளைகளுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கப் பட்டவுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி மேற்படி சங்க மண்டபத்தில் அதன் தலைவர் மா.கிருஷ்ணன் தலைமையில் இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

(உ-21)

## ஆட்சிக்குழு உறுப்பினர்தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்.பிரதேச இளைஞர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த 13 ஆம் திகதி நல்லூர் தெற்கு சனசமூக நிலைய முன்பள்ளி கேட்போர் கூடத்தில் முன்பள்ளியின் அதிபர் செல்வி.வினோதினி தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- இ.தமிழினி,உபதலைவர்:- ஏ.ரமேஸ்குமார்,செயலாளர்:-எஸ்.வினோ தினி, உபசெயலாளர்கள் கே.விஜயகுமார், கே.அஜித்குமார், தனாதிகாரி:-எம்.தொம்சன் இவர்களுடன் நிர்வாக சபை உறுப்பினர்கள் 5 பேரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-110)

## நிர்வாக சபை தெரிவு

(மயிலங்காடு)

உரும்பிராய் செல்லப்பா சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, இவ்வாண்டுக் கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக கா.இராசுகோபாலனும், உபதலைவராக தசீவலோகநாதனும், செயலாளராக இ.ஜெயக்குமாரும் உபசெயலாளராக வே.மகேந்திரனும், பொருளாளராக செ.பகிரதனும், தெரிவு செய்யப்பட்டதுடன் எண்மர் அடங்கிய நிர்வாகக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

(உ-118)

## சஞ்சிகை வெளியீடு

(தொல்புரம்)

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் மாதம் தோறும் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றது.

கிராம மட்ட மக்களுக்கு வேண்

## கொடும்பாவி எரிப்பு

(மயிலங்காடு)

உடுவில், கந்தரோடை மற்றும் சண்டிலிப்பாய் பகுதிகளில் வறட்சி காரணமாக நெற்பயிர்கள் அழிவடைந்து,வருவதால்மழை வேண்டி விவசாயிகள் இரவு வேளையில் வீதிகளில் கொடும் பாவிகளை இழுத்துச் சென்று எரித்து வருகின்றனர்.

(உ-118)

## ஆலயம் புனரமைப்பு

(மயிலங்காடு)

ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் புனரமைப்புப் பணிகளுக் கென இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 25 ஆயிரம் ரூபா வையும், லண்டனிலுள்ள தம்பிஜயா சம்பா என்பவர் 20 ஆயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளனர்.

மேற்படி நிதியைப் பயன்படுத்தி தற்போது இவ்வாலயத்தின் புனரமைப்புப் பணிகள் நடை பெற்று வருகின்றன.

(உ-118)

## ஓய்வு பெற்றார்

(தாவடி)

யாழ்.கல்வி வலயத்தில் விவசாய முதன்மையாசிரியராகக் கடமையாற்றிய வேலுப்பிள்ளை- கைலைநாதன் தனது 35வருட கல்விச் சேவையை நிறைவு செய்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

(தி-117)

## விழிப்புணர்வு படக்காட்சி

(சுதுமலை)

சாவல்கட்டு கிராமத்தில் கடந்த வாரம் பல்,முரசுவியாதிகளைக் கட்டுப்படுத்தல், விழிப்புணர்வு வீடியோபடக்காட்சி ஒன்று, சுகாதார திணைக்கள அதிகாரிகளால் காண்பிக்கப்பட்டது.

பொதுவாக பாடசாலைச் மாணவர்களும் முன்பள்ளிச் சிறார்களுமே மிக அதிகளவில், பல் முரசு வியாதிகளிற்கு உட்படுவதாகவும், பெற்றோர் இவ்விடயத்தில் மிகவும் விழிப்பாக இருந்து ஆரோக்கியமாக பற்களைப் பேண நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இதில் வலியுறுத்தப்பட்டது.

(உ-252)

## வேரடிமண் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு விழா வேரடிமண் இன்று திங்கட்கிழமை கைதடி, நாவற்குழி தெற்கில் இடம்பெறும்.

(தி-8)

## உணவுச் சட்டத்தில் திருத்தம்

(கொழும்பு)

புலமைச் சொத்து சட்டத்தின் புதிய விதிமுறைகள் அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளன.

கலைஞர்கள்,படைப்பாளிகள்,கைத்தொழிலாளர்கள் மாத்திரமன்றி வர்த்தகர்களும் இதன் மூலம் பயனடைவர்.

(தி-60)

★ ★ ★

(கொழும்பு)

உணவுப் பொருட்கள் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இத்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் 20 புதிய சட்டதிட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளதாக உணவுப் பொருட்களின் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

நகரமயமாக்கலின் விளைவால் நுகர்வுப் பொருள்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

புதிய திருத்தங்களின்படி உணவுச் சட்டதிட்டங்களை மீறு வோருக்கான அபராதத் தொகை அதிகரிக்கப் படவுள்ளது. மேலும் உணவுப்பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்ட தினம்,அவைகாலவதியான நாள், விலை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் உணவுப் பொருள்களின் தரம் குறித்தும் கவனம் செலுத்தப் படவுள்ளது.

(தி-60)

## சமுர்த்தி உத்தியோகத்தர் இடமாற்றம்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத் தர்கள் 7 பேர் கடந்த 16 ஆம் திகதி முதல் மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்:-

அவர்களின் விபரம் வருமாறு எஸ்.மோராஜ்-சமுர்த்தி முகாமை யாளர்,சமுர்த்தி உத்தியோகத்தர் களான ஏ.தயாபரன்,எஸ்.சிவகுமார், என்.அண்ணாத்துரை, கே.கிருபாகரன், எஸ்.கங்காதரன், வி.ரவிச்சந்திரன்.

(தி-24)

## நிர்வாக சபை தெரிவு

(இருபாலை)

ஆனந்தபுரம் கலைமணி சனசமூக நிலையம் மற்றும் ஆனந்தபுரம் ஞானஒளி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு புதிதாக நிர்வாக சபை உறுப் பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கலைவாணி சனசமூக நிலையத்

# உலக சமூக மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி பங்கேற்பு

(கொழும்பு)

கடந்த 16ஆம்திகதி முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை நடைபெற்று வருகின்ற உலக சமூக மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களும், வர்த்தகத் தலைவர்களும் ஜப்பான் பயணமாகவுள்ளனர்.

இம்மாநாட்டில் மொத்தம் 130 நாடுகள் பங்கேற் கின்றன.

உலக மயமாக்கலுக்கு எதிரான கருத்துக்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

(தி-6)

# கிளிநொச்சியில் இன்று உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களிற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்த உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ திட்டமிடல் செயலகத்தில் இன்று காலை இம் மாநாடு நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஐரோப்பிய மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளின் தூதுவர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணயநிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகளின் பொருளியல் மற்றும் அரசியல் நிபுணர்களுடன் மேற்படி பிரதிநிதிகள் கலந்துரையாடவுள்ளனர்.

இப்பேச்சுக்களில் கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு தேவையான உதவிகள் குறித்து பிரஸ்தாபிக்கப்படவுள்ளது.

அத்துடன், இவ்வாண்டின் அபிவிருத்திகளுக்காக பல்வேறு சர்வதேச அமைப்புக்களாலும் வழங்கப்படவுள்ள நிதியங்களை முன்னுரிமை அடிப்டையில் பயன்படுத்துவது தொடர்பான திட்டமிடல்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

(தி-4)

# கொழும்புத்துறை மக்கள் போராட்டம் நடத்த முயற்சி

கொழும்புத்துறை பொது அமைப்புகள் மறியல் போராட்டம் ஒன்றைச் செய்வதற்கு முயற்சி எடுத்து வருகிறது.

கொழும்புத்துறை நெடுங்குளம் மற்றும் அதன் ஒரு பகுதி என்பன இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இதனால் சுமார் 150றிற்கும் அதிகமான வீடுகள் அப்பிரதேசத்தினுள் முடங்கிக் கிடக்கின்றன. அவ் வீடுகளை உரிமையாளர்கள் பார்வையிடுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் அப்பிரதேசங்களுக்கான வீதிகளும் முற்றாகத் தடைப்பட்டுள்ளன.

இராணுவ அதிகாரிகளிடம் இவ் விடயங்கள் குறித்து பல தடவைகள் தெரிவித்தும் பயனளிக்கவில்லை. அத்துடன், தும்புத் தொழிலை நம்பியிருக்கும் மக்களின் கைத்தொழிலிற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதி வழங்கப்படுவதால் கயிறு உற்பத்தியாளர்கள் பெரும் பின்னடைவுகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

இத்தோடு மீன்பிடிப்பதற்கும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி பல கெடுபிடிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனால் இவற்றுக்குத் தீர்வு காணும் முகமாக கொழும்புத்துறை பொது அமைப்புகள் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

(தி-51)



(தொல்புரம்)

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் மாதம் தோறும் சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருகின்றது.

கிராம மட்ட மக்களுக்கு வேண்டிய உதவித் திட்டங்கள் சம்பந்தமான தொடர்புப் பாலமாக இச் சஞ்சிகை அமைந்துள்ளது.

வலி.மேற்கு பிரிவிலுள்ள துறை சார்ந்த அதிகாரிகளின் செவ்வி மாதாந்தம் இதில் வெளிவருகின்றது.

இதன் முதல் வெளியீட்டை கடந்த 7 ஆம் திகதி வலி-மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் சம்பிரதாய பூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

(தி-70)

## வதிவிடப்பயிற்சி

(வடலியடைப்பு)

கலாசார உத்தியோகத்தர்களுக்கான நான்கு நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் திருகோணமலை உப்பு வெளியில் உள்ள மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயற்சித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப்பட்டறையில், திட்டங்களை இனங்காணல் மற்றும் ...ச் செயற்பாட்டு அறிக்கை ...தல் தொடர்பான பயிற்சிகள் ...படவுள்ளதாக பண்பாட்டு... ...கள் திணைக்களத்தின் ... பணிப்பாளர் என். ஸ்ரீதேவி ...பிரதேச செயலகங்களுக்கும் ...த்துள்ளார். (உ-21)

தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பெண்கள் பங்குபற்றும் பாரம்பரிய விளையாட்டு விழா வேரடிமண் இன்று திங்கட்கிழமை கைதடி, நாவற்குழி தெற்கில் இடம்பெறும்.

(தி-8)

## ஆக்கங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினரின் ஆதரவுடன் வருடந்தோறும் அறநெறிப்பாடசாலை மாணவர்களால் வெளியிடப்படும் " மருதடியான் மலர் 2004" இம்முறையும் வெளியிடப்படஇருப்பதால் தகுந்த ஆக்கங்களை அனுப்புமாறு அறிஞர்கள், ஆன்மீகப்பெரியோர்கள், மருதடி விநாயகர் அடியவர்கள் ஆகியோரை வெளியீட்டாளர்கள் கேட்டுள்ளனர். (தி)

## பயிற்சி நிலையம் இடமாற்றம்

(தாவடி)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தால் இதுவரை காலமும் சுன்னாகம் மின்சார நிலையத்தருகில் இயங்கிவந்த தும்புப் பயிற்சி நிலையம் தற்போது இணுவில் மஞ்சத்தடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தொழிற்துறைத் திணைக்களத்தின் கீழ், பிரதேச செயலகத்தால் இத் தும்புப் பயிற்சி நிலையம் இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(தி-117)

ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையம் மற்றும் ஆனந்தபுரம் ஞானஒளி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு புதிதாக நிர்வாக சபை உறுப் பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கலைவாணி சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக சி.பிறேமும், செயலாளராக பொ. கண்ணனும், பொருளாளராக க.பாலாதாசும், ஞானஒளி சனசமூக நிலையத்தின் புதிய தலைவராக த.சுப்பிரமணியமும், செயலாளராக ச.சாந்தினியும், பொருளாளராக இ.திருநாவுக்கரசும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (தி-84)

## முன்பள்ளி ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்று அந்தோனியார் முன்பள்ளி ஒன்று கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் முன்பள்ளியின் ஆரம்ப நிகழ்வு ஊர்காற்றுறை புனித அந்தோனியர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சூசைப்பிள்ளை தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜெ.எக்ஸ் செல்வநாயகம் கிராம அலுவலர் ஜெ.பத்திநாதன் உட்பட பல அதிகாரிகள் கலந்துகொண்ட்னர்.

(தி-75)


## கொப்பிகள் அன்பளிப்பு

( கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை மாதாகோவில் மாணவர்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் 300 அப்பியாசக்கொப்பிகளை வழங்கியுள்ளது. (தி-51)



அண்மையில் யாழ். மாநகர சபை வளாகத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட அதிபர் எட்வின் வசந்தராஜா அடிகளார் சுடர் ஏற்றுவதையும், அருகில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் மற்றும் விழாக்குழுவினர் ஆகியோர் நிற்பதையும்,



இந்நிகழ்வில் மாநகர சபை ஆணையாளர் இ. இராமலிங்கம் தலைமையுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஜோ.ஜெஸ்ரின்)

## இன்று ஒரு தகவல்

# தியாகராஜர்

தியாகராஜர் தெலுங்கில் ஒரு நாடகம் எழுதினார்."நௌகா சரித்திரம்" என்று அதற்குப் பெயர். பாகவதத்தில் இல்லாத ஒரு கற்பனையில் கோபிகா பெண்களின் கர்வத்தை கண்ணன் அடக்குவதாக அமைந்த ஒரு நாடகம் அது. அந்த நாடகத்தை எழுதி முடித்த தியாகராஜர் தனது சீடரிடம் கொடுத்தார். அவரது பெயர் வேங்கடரமணபாகவதர்.

அவர் அதை எடுத்துக்கொண்டு தனது வீட்டுக்குப் போய் படித்துப்பார்த்தார். மிகவும் சந்தோஷப்பட்டார். மிக நீண்ட காலத்தின் பின் இந்த " நௌகா சரித்திரம்" வெளியிடப்பட்டது. எல்லோரும் படித்துப்பார்த்தனர். அதன் கற்பனை நயம் மிகவும் அருமையாக இருந்தது. சங்கீத வித்துவான் எல்லோரும் இதைப்பற்றியே பேச ஆரம்பித்துவிட்டனர்.

இருந்தாலும் வேறு சில ஆஸ்தான வித்துவான்களால் இதைப்பொறுக்க முடியவில்லை. அவர்களுக்குப் பொறாமை வந்துவிட்டது. அந்தக்காலத்திலும் இது போன்ற விஷயங்கள் இருந்திருக்கிறது. பொறாமை வந்த உடனே அந்த வித்துவான்களால் சும்மா இருக்க முடியவில்லை.

நேராகத் தஞ்சாவூர் மகாராஜாவிடம் சென்று பற்ற வைத்துவிட்டார்கள் " தியாகராஜர் புதிதாக ஒரு நாடகம் எழுதியுள்ளார். கண்ணனைப் பற்றியும் கோபிகா பெண்கள் பற்றியும் அதில் மிகமோசமாக விபரித்துள்ளார். அதைப் படித்தால் மக்கள் மனங்கள் கெட்டுப்போய்விடும். அதனால் உடனே அதைத் தடை செய்யவேண்டும்" என்று புகார் செய்தனர்.

மகாராஜா யோசித்தார். "தியாகராஜர் இது போன்ற தவறான காரியம் செய்யமாட்டாரே" என்று நினைத்து ஆச்சரியப்பட்டார். இருந்தாலும் வித்துவான்கள் விடுவது போலில்லை. "இல்லை மகாராஜா! அதை எப்படியும் தடை செய்துதான் ஆக வேண்டும். அதற்குச் சரியான மூல நூல் எதுவும் சமஸ்கிருதத்தில் இருந்தால் நாம் ஒப்புக்கொள்ளலாம். இல்லாவிட்டால் அதைத் தடைசெய்வது தான் நியாயம்" என்றனர்.

தஞ்சாவூர் மகாராஜா பார்த்தார். வேறு வழியில்லை உடனே தியாகராஜருக்கு ஒரு கடிதம் எழுதினார். " நௌகா சரித்திரத்துடன் நீங்கள் அரண்மனைக்கு வரவேண்டும்" என்று எழுதி அனுப்பினார். தியாகராஜரும் உடனே அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். நௌகா சரித்திரத்தைக் கொடுத்தார்.

ராஜா அதை வாங்கிப்படித்தார். " இது நன்றாகத்தான் உள்ளது! ஆனாலும் இதற்கு சமஸ்கிருதத்தில் ஏதாவது நூல் உள்ளதா? இருந்தால் எடுத்துக்கொண்டு வாருங்கள். இந்த வித்துவான்கள் எல்லோரும் அதைத்தான் கேட்கின்றனர். அது இருந்தால் அவர்கள் இதை ஒத்துக்கொள்வதற்குத் தயார் என்று கூறுகின்றனர்" என்றார் ராஜா.

தியாகராஜர் திரும்பி வீட்டுக்கு வந்தார். ஸ்ரீராமனை நினைத்தார். "ராமா! இது என்ன சோதனை? தெலுங்கில் எழுதிய இந்த நாடகத்திற்கு சமஸ்கிருத நூல் வேண்டும் என்றால் அதற்கு நான் எங்கு போவேன்" என்றார். அந்த நேரம் பார்த்து அவரது சீடர் வேங்கடரமண பாகவதர் அங்கே வந்தார். " என்ன ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள் ? " என்று விசாரித்தார். அரண்மனையில் நடந்த விஷயத்தைக் கூறினார் தியாகராஜர்.

அதைக்கேட்ட அவர் " இவ்வளவு தானே! இதற்கு ஏன் இவ்வளவு கவலைப்படுகிறீர்கள். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட அந்த நௌகா சரித்திரம் என்னிடம் உள்ளதே" என்றார். "அது எப்படி இருக்க முடியும்? என்றார் இவர். " சுவாமி நீண்ட வருடங்களுக்கு முன்பு நீங்கள் எழுதிய நௌகா சரித்திரத்தை என்னிடம் கொடுத்தீர்கள். படித்துப்பார்த்தேன் மிகவும் அரு

# ஜனாதிபதியிலும் பார்க்க பிரதமர் மீது மக்கள் அதிகளவு நம்பிக்கை

## கருத்துக்கணிப்பு மூலம் கண்டறிவு


(கொழும்பு)



நாட்டில் கடந்த காலங்களிலும் இனிவரும் காலங்களிலும் மேற்கொள்ளப் படவுள்ள அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிலும் பார்க்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்கள் அதீத நம்பிக்கை வைத்துள்ளதாக "சோஷல் இண்டிகேட்டர்" என்ற அரச சார்பற்ற அமைப்பு அண்மையில் நடாத்திய கருத்துக் கணிப்புகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி அரச சார்பற்ற அமைப்பு ஒவ்வொரு மாகாணங்கள் ரீதியாகவும் நடாத்திய இது தொடர்பான ஆய்வுகளில் இருந்து,

அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நாட்டு மக்களில் 56 சதவீதமானோரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது 52 சதவீதமானோரும் நம்பிக்கை வைத்துள்ள அதேவேளை, இராணுவத்தினர் மீது 73 சதவீதமானோரும், தேசிய அரசாங்கத்தின் மீது 46 சதவீதமானோரும்,பொலிஸார் மீது 39 சதவீதமானோரும் நம்பிக்கை வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது.



அத்துடன் ,சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள் என்ற வரிசையில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு 78சத வீதமானோரும்,தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு 73 சதவீதமானோரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 31 சதவீதமானோரும் , ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு 21 சதவீதமானோரும் தமது நேரடி ஆதரவை தெரிவிக்கின்றனர். சமாதான முன்னெடுப்புக்களுக்கு வட மாகாணம், கிழக்கு மாகாணம், வடமேல் மாகாணம், மேல் மாகாணம், வட மத்திய மாகாணம் மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகியன முறையே 66,50,25, 17,19,39, 21,27,13 சதவீதமான மக்கள் நேரடியான ஆதரவை வழங்குவதாகவும் இவ் ஆய்வுக் கருத்துக் கணிப்புக்களின் மூலம் தெரியவந்துள்ளது.

(தி-18)

## செல்வபுரம், யோகபுரம் கிராமங்களில்

# 73 பாடசாலை மாணவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகல்

(இருபாலை)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யோகபுரம், செல்வபுரம் மற்றும் ஆனந்தபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள 73 மாணவர்கள் குடும்ப வறுமை காரணமாகத் தமது கல்வியைத் தொடர முடியாமல் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இருபாலை மக்கள் நலன் காக்கும் பிரிவினால், "பங்கேற்புடனான கிராம அபிவிருத்தித் திட்டம்" தொடர்பாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் ஆண்டறிக்கைத் தரவுகள் மூலமே இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் காரணமாக குடும்பத்தலைவர்களை இழந்தமை,வேலையில்லாப் பிரச்சினை மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் போன்ற காரணங்களால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்ட குடும்பங்களில் உள்ள சிறுவர்களே தமது கல்வியைத் தொடரமுடியாமல் பாடசாலைகளில் இருந்து இடைவிலகியுள்ளனர்.

இதனடிப்படையில், பாடசாலைக் கல்வியை மேற்கொள்ள வேண்டிய பராயத்தில் யோகபுரத்தில் 163 சிறுவர்களும், ஆனந்தபுரத்தில் 130 சிறுவர்களும், செல்வபுரத்தில் 345 சிறுவர்களும் காணப்படுகின்ற போதிலும், மேற்படி காரணங்களினால் யோகபுரத்தில் 14 சிறுவர்களும், ஆனந்தபுரத்தில் 10 சிறுவர்களும், செல்வபுரத்தில் 49 சிறுவர்களும் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனர்.அத்துடன், மேற்படி கிராமங்களில் உள்ள சிறுவர் முன்பள்ளிகளில், அடிப்படை வசதிகளே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்

## இராசி பலன்

**19 .01. 2004**

**(தை 5, திங்கட்கிழமை)**

| | | |
|---|---|---|
| துவாதசி | காலை | 9.32 வரை |
| கேட்டை | நண்பகல் | 12.12 வரை |
| இராகுகாலம் | | 8.05-9.35 மணிவரை |
| சுபநேரம் | | 12.35-2.05 மணிவரை |

**சித்தம், பிரதோஷ விரதம்**

**மேடம்**

சுயதொழில் சிந்தை, ரோகநிலை, காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**இடபம்**

ஆரோக்கியக் குறைவு, மனஸ்தாபம், முயற்சி தாமதம், போசனசுகம்.

**மிதுனம்**

சத்துரு ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, செல்வாக்கு.

அந்த நௌகா சரித்திரம் என்னிடம் உள்ளதே என்றார். அது எப்படி இருக்க முடியும்? என்றார் இவர். " சுவாமி நீண்ட வருடங்களுக்கு முன்பு நீங்கள் எழுதிய நௌகா சரித்திரத்தை என்னிடம் கொடுத்தீர்கள். படித்துப்பார்த்தேன் மிகவும் அருமையாக இருந்தது. சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்கலாமே என்று தோன்றியது. உடனே மொழி பெயர்த்து வைத்துவிட்டேன். அதை உங்களிடம் தெரிவிக்காமல் இருந்து விட்டேன். அதை எடுத்துக்கொண்டு வருகிறேன். கொண்டு போய்க் காட்டுங்கள். அதன் பின் அந்த வித்துவான்கள் வாய் திறக்க மாட்டார்கள்" என்றார்.

அதேபோல் உடனே புறப்பட்டு அய்யம்பேட்டைக்குச் சென்றார். அதுதான் அவருக்குச் சொந்த ஊர். முன்பு எழுதி வைத்திருந்த ஓலைச்சுவடியை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தார். தியாகராஜர் அரண்மனைக்கு எடுத்துக் கொண்டு போய் காட்டினார். பொறாமைப்பட்ட ஆஸ்தான வித்துவான்கள் அடங்கிப் போய்விட்டனர். இதுபோல் நௌகா சரித்திரம் பற்றியே ஒரு சரித்திரம் உள்ளது. இன்று அதன் அருமை பெருமையை அனுபவித்து ரசிக்கிறோம்.

இந்தக்காலத்து எழுத்தாளர்கள் எல்லோரும் தியாகராஜர் போல் கவலைப்படுவதில்லை. அதுபோல் சிரமங்களும் இவர்களுக்கு ஏற்படுவதில்லை. எனக்குத்தெரிந்த ஒருவர் ஒரு வரலாற்று ஏட்டை என்னிடம் காட்டி அபிப்பிராயம் கேட்டார். "இதைப் புத்தகமாக வெளியிடலாம் என்று நினைக்கிறேன் நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்?" என்றார். நான் சும்மா விளையாட்டுக்காக தியாகராஜரிடம் மகாராஜா கேட்டது போல் "இதற்கு ஆதாரமான மூல நூல் ஏதாவது இருக்கின்றதா?" என்று கேட்டேன். அவர் மெதுவாக என்னிடம் வந்து " மூல நூலே இது தான் சார்! லைப்ரரியிலிருந்து கொண்டுவருகிறேன். இதைப்பார்த்து நான் புத்தகமாக எழுதப்போகின்றேன்" என்றார். இவரெல்லாம் எந்த சரித்திரம் எழுதினாலும் யாரும் எதுவும் செய்து விட முடியாது.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

**மிதுனம்**

சத்துரு ஜெயம், குடும்ப மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, செல்வாக்கு.

**கடகம்**

மனமகிழ்ச்சி, உறவினர் சந்திப்பு, உற்சாகம், காரிய அனுகூலம்.

**சிங்கம்**

தாழ்ந்த சுபாவம், சிறு வியாதி, முயற்சி தாமதம், வியாபார நன்மை.

**கன்னி**

மனப் பயம், உற்சாகம், முயற்சி தாமதம், பகைவர் நேசம்.

**துலாம்**

சகோதரர் உதவி, பிரயாண நன்மை, தனவரவு, உடல் நலம்.

**விருச்சிகம்**

இடமாற்றம், மாதர் நட்பு, காரிய தாமதம், அதிக வார்த்தை.

**தனுசு**

பெரியோர் உதவி, சயன சுகம், எடுத்த காரியம் கைகூடும், தொழில் சிந்தை.

**மகரம்**

காரிய அலைச்சல், நண்பர் சந்திப்பு, அமைதிக் குறைவு, சுப செலவு.

**கும்பம்**

பெரியோரால் மதிக்கப்படல், தொழில் நன்மை, கீர்த்தி, முயற்சி கைகூடும்.

**மீனம்**

அதிக பிரயாசை, நல்ல சம்பவம், புதிய முயற்சி, நிலைமாற்றம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

செல்வபுரத்தில் 49 சிறுவர்களும் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனர். அத்துடன், மேற்படி கிராமங்களில் உள்ள சிறுவர் முன்பள்ளிகளில், அடிப்படை வசதிகளே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய கற்றல் உபகரண வசதிகளோ இல்லாத நிலையில் பலகாலமாக இருந்து வருகின்றன.

இவற்றாலும், மேற்படி கிராமங்களில் உள்ள முன்பள்ளிச் சிறார்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகும் நிலை இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-84)

# சைவபரிபாலன சபையின் சமய பாடப் பரீட்சை முடிவுகள் மாத இறுதியில்

(வடலியடைப்பு)

கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற யாழ். சைவ பரிபாலன சபையின் சமய பாடப் பரீட்சை முடிவுகள் இம் மாத இறுதியில் வெளியிடப்படும் என சங்கத்தின் தலைவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் மேற்படி சபை நடத்திய சமய பாடப் பரீட்சைக்கு வடமாகாணத்தில் உள்ள 422 பாடசாலைகளில் இருந்து 79 ஆயிரத்து 500 மணவர்கள் தோற்றியுள்ளனர்.

பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பணி முடிவடைந்து விட்டதால் இம்மாத இறுதியில் முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கு உதவும் முகமாக சபையின் நூலகம் வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8 மணிமுதல் மாலை மணிவரை திறந்து வைக்கப்பட்டுள்ளது என அ விக்கப்பட்டுள்ளது.

சைவப்புலவர் ,இளஞ்சைவப்புலவர்களுக்கா பயிற்சி வகுப்புகள் யாழ்ப்பாணம் நாவலர் மகா தியாலயத்தில் தற்போது நடைபெற்று வரு தெரிந்ததே . (தி-2

### அதிகார மீளளிப்பு நடவடிக்கையை மேற்பார்வையிட

# ஐ. நா. சபையை மீண்டும் ஈராக்கிற்கு செல்லுமாறு அமெரிக்கா கோரிக்கை

(வாஷிங்டன்)


ஈராக்கியர்களிடம் அதிகாரத்தை மீளக்கையளிக்கும் நடவடிக்கையை மேற்பார்வையிட, ஐக்கிய நாடுகள் சபையை மீண்டும் ஈராக்கிற்குச் செல்லுமாறு அமெரிக்கா கோரவுள்ளது.

இது தொடர்பாக ஈராக்கிற்கான அமெரிக்க நிர்வாகி போல் பிறிமர் இன்று திங்கட்கிழமை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் கோபி அனானைச் சந்திக்கவுள்ளார்.

நேரடித் தேர்தல் ஒன்றை ஈராக்கில் நடத்த வேண்டுமென்ற பெரும்பான்மை ஷியா இன மக்களின் கோரிக்கைகளுக்கு மத்தியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஈராக்கின் இடைக்கால அரசாங்கத்தின் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆதரவை வழங்குமாறு, இந்தச் சந்திப்பின் போது பிறிமர் கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாமின் ஆட்சிக் காலத்தில் அடக்குமுறைக்குள்ளான ஷியா முஸ்லிம்கள் தற்போது அமெரிக்கா முன்வைத்த அரசியல் கட்டமைப்பின்றி ஜனநாயகம் வேண்டுமெனக் கோருகின்றனர். அவர்கள் தற்போது தமது அரசியல் பலத்தை காண்பிக்க முயற்சிப்பதாகவும் அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, தேர்தல் நடாத்தப்படாவிட்டால் வன்முறையும், ஆர்ப்பாட்டமும் தொடருமென ஷியாப் பிரிவு சிரேஷ்ட மதகுரு ஒருவர் எச்சரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (தி-2)



அமெரிக்க கூட்டுப்படையின் ஈராக் மீதான போரினை அடுத்து மீண்டும் புனரமைக்கப்படவுள்ள தலைநகர் பக்தாத்திற்கு அருகே உள்ள நீர் ஏரியினையே இங்கு காண்கின்றீர்கள்.

## ஆப்கானில் புதுவகை இருமல் 16குழந்தைகள்பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தறபோது பரவிவரும் புதுவகை இருமலினால் இதுவரை 16குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

ஆபகானிஸ்தானில் குவாகாண் மாவட்டம் மற்றும் வடபகுதியில் அமைந்துள்ள பதாத் மாகாணத்திலும் கடும் பனி மற்றும் கால நிலை மாற்றங்களினாலுமே இந்த இருமல் பரவிவருவதாகத் தெரிய வருகிறது.

இந்த இருமல் பரவும் பகுதிகளில் மருந்துப் பொருட்களின் வசதிகளும வைததியர்களின் வசதிகளும் பற்றாக்குறையாக இருப்பதால் மேலும் இந்நோய் பரவுவதற்கான சாத்தியககூறுகள் காணப்படுவதாக ஆப்கானிஸ்தான் சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர். (தி-2)



அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற எம்.ஜி.ஆர் பிறந்த நாள் விழாவில் எம்.ஜி.ஆர். வேடமணிந்து வந்திருந்த குழந்தை சதாம் உசேன்.

## பாகிஸ்தானில் தீவிரவாதத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

### பாராளுமன்ற உரையில் அதிபர் முஷாரப்

(இஸ்லாம பாத்)

பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதக்குழுக்கள் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் பாராளுமன்றக் கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

பாகிஸ்தானின் தற்போதைய பாராளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் ஆற்றிய இந்த முதல் உரையில், அனைத்து விதமான இயற்கை வளங்களும் எமது நாட்டில் உள்ளபோதும் அவற்றை உரியமுறையில் பயன்படுத்த முடியாததால் நாடு பின்தங்கிய நிலையில் இருக்கிறது.

தீவிரவாதத்தை முற்றாக அழிக்க போர் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். தீவிரவாதம் பாகிஸ்தானில் இயங்குவதை நான் ஒருபோதும் அனுமதிக்கப் போதில்லை என்றும் இதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் முயற்சியினை பாகிஸ்தான் பாதுகாப்புத் துறையினர் மேற்கொள்ளவுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இக் கூட்டத் தொடரில் அனைத்துக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள, முப்படைத் தளபதிகள், முதலமைச்சர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (தி-2)

WORLD NEWS உலக தரிசனம்



## விமானம் தாங்கி கப்பல் கொள்வனவு

(புதுடில்லி)

ரஷ்ய விமானந் தாங்கிக் கப்பல் "அட்மிரல் கோஸ்ரோவை" வாங்குவதற்கு இந்திய பாதுகாப்பு குறித்த மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இது குறித்து இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள ரஷ்ய வெளியுறவு அமைசசர்களின் 3 நாள் இந்திய விஜயத்தின் போது ஒப்பந்தம் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தை ரஷ்யாவுடன் ஏற்படுத்திக் கொள்வதற்கான அதிகாரத்தை பாதுகாப்பு மத்திய அமைச்சரவைக் குழு பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸிற்கு வழங்கியுள்ளது.

இதேவேளை, இரண்டாயிரத்து 800 கோடி ரூபா பெறுமதியான இக் கப்பலை இந்தியா கொள்வனவு





சிறுவனை மானபங்கம் செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜரான பின், ரசிகர்களைச் சந்தித்த பொப் இசை பாடகர் மைக்கேல் ஜாக்சன்.

அதிகாரத்தை பாதுகாப்பு மத்திய அமைச்சரவைக் குழு பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸிற்கு வழங்கியுள்ளது.

இதேவேளை, இரண்டாயிரத்து 800 கோடி ரூபா பெறுமதியான இக் கப்பலை இந்தியா கொள்வனவு செய்வதன் மூலம் அதன் பாதுகாப்பு மேலும் பலம்பெறும் என இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. (தி-2)

மற்றும் பலர் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (தி-2)



மிகப்பெரிய தீவிரவாத அமைப்பான ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்பின் தளபதி காஸி நசீருதீன் அவரது வீட்டில் வைத்து பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட போது

# தேர்தல் குறித்து முடிவெடுக்க போதிய கால அவகாசமுள்ளது

## தமிழக முதலமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

நடைபெறவுள்ள மக்களவைத்



தேர்தல் குறித்து அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லையென அக்கட்சியின பொதுச் செயலாளரும், தமிழக முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவுனருமான அமரர் எம்.ஜி இராமச்சந்திரனின் 87 ஆவது பிறந்த தினத்தையொட்டி நேற்று முன் தினம் சென்னையிலுள்ள கட்சி அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா,

மாநிலத்தில் கூட்டணி அமைத்தோ அல்லது தனித்து போட்டியிடுவது குறித்தோ தற்போது தான் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் போதுமான கால அவகாசம் இருப்பதால், எங்கள் கட்சியின் நடவடிக்கைகளும், முடிவுகளும் நேரம் வரும் போது வெளியிடப்படுமென்றும் கூறினார்.

மத்தியில் பி.ஜே.பி மற்றும் காங்கிரஸ் அல்லாத, கட்சி அமைய வேண்டும் என்று சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டதையடுத்து அ.இ.அ.தி.மு.கவின் நிலைப்பாடு குறித்து செய்தியாளர்கள் வினவியதற்கு பதிலளித்த முதலமைச்சர், அரசியல் என பது மாற்றங்களை ஏற்றுக் கொள்வதும், எதிர்ப்புக்களைச் சந்திப்பதும் தான் என்று தெரிவித்துள்ளார். (தி-2)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான ஆகஸ்ட் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## துலாம்



**சித்திரை 3,4வது பாதம்-சுவாதி 4 பாதங்கள்-விசாகம் 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

தேவைகளை முடிப்பதில் பற்றாக் குறை இருக்கத்தான் செய்யும். சிலர் கடன் வாங்குவது, சிறு பிரயாணம் ஏற்பதும் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் வார்த்தையைக் காப்பாற்றுவதில் முன்எச்சரிக்கையாக யோசனையும் தேவைப்படுகிறது. பழைய சொத்துக்கள் சம்பந்தமாக வழக்கோ, பஞ்சாயத்துப் பேச்சுக்களோ உங்களுக்கு சாதகமாக இருக்காது என்பது நினைவுபடுத்த வேண்டி இருக்கிறது. புறங்கால் அல்லது கையில் சிறு காயத்தை உண்டாக்கும். கணவன், மனைவி உறவு கண்ணியம் மிக்கது. கவன மறதியினாலும் நட்டம் இருக்கிறது. நடுப்பகுதிக்கு மேல்தான் நீங்கள் பலம் மிக்கவர் உங்கள் வார்த்தையும் மற்றவர்கள் மத்தியில் செல்லும். தாயவழி உறவு செலவுகளை உண்டாக்கும் காலம் இது. உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மேலிடத்து உத்தரவு திருப்தியற்றதாகவே இருக்கும். விரும்பாத மற்றும் தேவையற்றதாகவே இருக்கும். விரும்பாத மாற்றம் தேவையற்றவர் சந்திப்பும் அவசியமாகும். அலைச்சல், அகால உறக்கம், தேக உஷ்ண அசௌகரியமும் உண்டாகும். அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு அவசர பிரச்சினைகளை முடிப்பதற்கு அவசியமாக இருக்கும். முற்பகுதியில் இருந்தததைவிட நடுப்பகுதியில் இருந்து மனத்தெளிவு, தூரத்து சந்தோஷச் செய்தியை அறிதல் போன்ற நன்மைகள இருக்கும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு முடியாத பிரச்சினை குறுக்கே இருந்து கொண்டுதான் இருக்கும். சொத்து, பண விஷயம் முக்கிய அம்சமாகும். பூமி, வீடு வாகனம் இந்த வகையிலும் வழக்கு தோன்றக்கூடும் என்பதால் முன் யோசனையுடன் நடந்துகொள்வது அவசியமாகும். நாகரிக வாகன சித்தி மனதுக்கு இனிமையைக் கொடுக்கும். கீழ்த்தர மனிதர்களின் பழைய நட்புதான் இப்போது சிலசமயம் இடையூறு உண்டாக்குவது, எழுத்து ஒப்பந்தம், குடும்பப் பிரச்சினைகள் போட்டி மனப்பான்மையுடன் இருக்கும். அயல் தேசப் பிரயாணம் கடிதத் தொடர்பும் அன்பை வளர்க்கும். தொழில் வழியில் உள்ள ஆட்களில் சிலர் சுமுகமாக இல்லை. சில சமயம் கசப்பான வாாத்தைகளும் உச்சக் கட்டத்தை அடையும். காது, பல் நோயும் சீதள பாதிப்பும் இடம்பெறும். குடும்பத்தில் அடிக்கடி பிணக்குகளும், பேதநிலையும் தவிர்க்கப்பட வேண்டும். கணவன், மனைவி உறவு கண்ணியம், இனிமை நிறைந்ததாக இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியம் திருபதியானதே. உறவு அல்லது நண்பர்கள் இல்லத்தில் சென்று விருந்துண்பது, சுபவிஷயப் பேச்சுக்களில் கலந்துகொள்வது முக்கியமாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு நல்ல மாற்றங்கள் குறித்துத் தகவல் கிடைப்பது சிலர் உத்தியோகத்தைப் பெறுவதும், பெரிய மனிதர்களின் சந்திப்பை அடைவதும் உண்டாகும். பழைய பாதிப்புகள் நீங்கள் முயற்சியில் வெற்றி தருவது மற்றவர்களால் பாராட்டை உண்டாக்கும். மேல்மட்டம் முதல் கீழ்மட்ட மனிதர்கள்வரை உங்களுக்கு அனுகூலமானவர்களே, பண வரவு, புது உடை, சித்தி, ஆரோக்கிய விருத்தியும் குறிப்பிடத்தக்கது.

## விருச்சிகம்



**விசாகம் 4 வது பாதம் அனுஷம் 4 பாதங்கள்-கேட்டை 4 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

நீங்கள் தொழில்வழி வெற்றி வீர்

கூடாது. உறவினர்கள் வகையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும் கண்டுகொள்ளாமல் செல்வதுதான் சிறப்பு. கணவன், மனைவி உறவு ஆரம்பத்தைவிட பிற்பகுதியில் பெருமைப்பட இயங்கிவரும். நீங்கள் மற்றவர் இல்லங்களுக்குச் செல்வதாலும் அவர்கள் உங்கள் இல்லத்தில் விருந்துண்பது நிற்காது. சில புதிய முயற்சிகள் பிறரால் பாராட்டையும் உதவியையும் உண்டாக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியாகவே இருக்கும். என்றாலும் மனைவிக்கு உஷ்ண சம்பந்தமான வலிகள் தோன்றிவிடும். கவனம் தேவை. காதலர்களுக்கு சுமாரான காலமாகும். கடன தொல்லைகள், வழக்கு பிரச்சினை குறையும் தூர

கூலமாக இருப்பின் பெருமைக்குரிய நன்மைகள் இருக்கின்றன. இப்போது இருக்கும் குரு மட்டுமே தீயவன். சுப வழியில்தான் செலவை உண்டாக்குவான். பணவரவு தாராளமாகவே இருக்கின்றன. பழைய நண்பர்கள் உறவினரைச் சந்திப்பது புதிய சூழ்நிலையை உறவினர்கள் மத்தியிலே தோற்றுவிக்கும். குடும்பநிலை உயர்வாகத்தான் இருக்கிறது. உத்தியோகப் பிரிவினர்களுக்கு எழுத்து நன்மைகள் உண்டு. மேல்மட்ட மனிதர்களின் அனுகூலச் செயல் ஆதரவாக இருக்கிறது. புதுமனை அமைத்தல், கடன் வாங்குவது சிலருக்கு வாகனச் சேர்க்கையும் உண்டாகும். அரசினர் வகையினருக்கு கௌரவப்பதவி வருதல் அல்லது பதவி உயர்வு போன்றவை இருக்கும் வெகுநாள் முயன்றவை இப்போது வெற்றியைக் கொடுக்கும். புகழ் ஓங்க எழில் மிகும். சூரியன் உச்சம் பெற்றிருக்கிறான். குடும்ப முன்னேற்றத்திற்கும் கூடி இருந்து நன்மைசெய்பவன் இந்த சூரியனும் சுக்கிரனும், நீங்கள் இந்த நிலையில் மாத ஆரம்ப நாளிலேயே நான்கு கிரகங்களை உச்சமாக உடையவர்கள். உங்கள் தொழில் மூலமாக உங்களை உச்சநிலையில் தூக்கி வைக்கக்கூடிய காலம் இது. மற்றவர் பாராட்ட உங்கள் செயல்கள் அமைந்து இருக்

# உங்களுக்கு எப்படி?

தேச பயணங்கள் ஒரு சிலருக்கு கைகூடும் செய்தொழில் எதுவாயினும் தீவிர கவனம் வேண்டும். சனி வேகம் குறைய ஆரம்பித்து விட்டது என்பதை கவனிக்கவும். ஒட்டி உறவாடி வந்த நண்பர்களும் சட்டென விலகிக் காணப்படுவர். அரசாங்கத்தின் கண்காணிப்பு அதிகரிக்கும்.

## தனுசு



**மூலம் 4 பாதங்கள்-பூராடம் 4பாதங்கள் உத்தராடம் முதல் பாதம் வரை 9 பாதங்கள்**

இந்த மாத ஆரம்பம் 7-ல் சனியும், சுக்கிரனும் கூடி, குடும்பத்தில் சில வகையான பிரச்சினையை உருவாக்கினாலும், கேந்திரத்துக் குரு சுமுகமாக்கி விடுவான். காடு மலைப்பகுதி பிரயாணத்தை மேற்கொள்வதும் கூட உண்டாகும். வழக்கு வகையில் செலவுகள் சிலருக்கு தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும் வார்த்தையோடு நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். இக்காலம் நடுப்பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல் புத்திரர், புத்திரியர்கள் வகையிலும் கவனம் செலுத்த வேண்டும். விபத்து, அடிபடுதல் போன்றவைகள் அவர்களுக்கு நிகழத்தக்கவை. குடும்பத்திலும் கணவன், மனைவி இடையில் சிறு பூசல் உண்டு. இத்தனைக்கும் காரணம் மூன்றாவது மனிதரே. பெண்கள் முதன்மையாக வைத்து எழும் பிரச்சினையும் முக்கியம் வாய்ந்தது. எனவே, உங்கள் கௌரவத்தில் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும். காது, பல் சம்பந்தமான பிணி பாதிக்கவும் வாய்ப்பு இருக்கிறது. உத்தியோகப் பிரிவினர்கள் தாங்கள் நினைத்தபடி சாதனை புரிந்திடுவர். தனக்கு எதிராக இருந்தவர்களை மாற்றல் மூலம் மற்றவர்கள் அன்பை பெறுவதும் மறைத்துவைக்கப்பட்டகாரியங்கள் சிலவற்றை வெளிக்குக் கொண்டுவருதல் மன திருப்திக்கும், அமைதிக்கும் காரணமாகும். மாணவ, மாணவிகளுக்கு கல்வி நெருக்கடி இருக்கும். பக்கத்தில் உள்ளவர்கள் பகை உடையவர்களாக இருப்பர். தனவரவு, நாகரிகப் பெருள் சித்தி, வாகன மாற்றம் போன்றவற்றை உண்டாக்கும். வழக்குப் பாதிக்க வாய்ப்பு இல்லை. குடும்பத்தில் சொத்து விவகாரம் இருப்பவர்களுக்கு வேகம் இல்லை. நல்ல உணவு சித்தி நல்ல உடை, மகிழ்ச்சியான போக்கும் விருந்துண்பதும் குறிப்பிடத்தக்கது. கார், லொறி போன்ற வாகனம் வைத்து தொழில நடத்துபவர்களுக்கும் ஒப்பந்தம் போன்ற தொழில் செய்பவர்களுக்கும். இது வளர்ச்சிதரும் மாதம் என்பதில் சந்தேகம் இல்லை. சிலருக்கு வழக்கு உடனும் இருந்துகொண்டுதான இருக்கும். ஆரோக்கியம் சிறு சிறு பாதிப்பு தவிர மிகப் பெரிய பாதிப்புகள் எதுவும் இல்லை. இந்த ராசி மாணவர்களுக்கு கல்வி உயர்வு குறித்தபடியே இருக்கும். என்றாலும கவனித்துப் படிக்க வேண்டும். பிரயாணங்களும் இடம்

கும். திருமணம் ஏற்பது, தேவைகள் குறித்தபடி பூர்த்தியாகும். கல்வி கற்கும் மாணவ மாணவியர்களுக்கு உயர் கல்வி பெறுவது, அயல்நாடு செல்வது போன்ற நன்மையும் உத்தியோகப்பிரிவு பெண்கள், ஆண்களுக்கு உண்டாகும். மருத்துவச் செலவு முக்கியம் வாய்ந்ததாகவும் இருக்கும். எதிர்பாராத பிரயாணமும் இடம்பெறும். கலைப்பிரிவினர் ஒரே சீரான போக்கு உடையவர்களாக இருப்பர். குரு பார்வை மட்டும் நன்றாக இருக்கிறது கூட்டுத் தொழில் உள்ளவர்களுகக்கு இது ஆதாயம் தரும். தனம் கொடுக்கல், வாங்கல் பிடிப்பாக இருக்கும். கணக்கு வகைகளை ஒழுங்குபடுத்த வேண்டும். இல்லையேல் கூட்டாளிகள் மன பேதத்திற்கு ஆளாக வேண்டியிருக்கும். கணவன் மனைவியிடையே மன பேதம் எதுவும் இல்லை. தொழில் சம்பந்தமான பிரச்சிளைகளில் உங்கள் போக்கு மற்றவர்களால் பாராட்டுப் பெறக்கூடியதுதான். சில வழி நன்மை இல்லை. நீங்கள் கடந்த காலத்தைப்போல் இந்தக் காலத்தையும் வீணடிக்க முடியாது. சிலர் கலை சம்பந்தப்பட்ட ஈடுபாட்டில் செயல்படுவதில் நன்மதிப்பு சந்தோஷ நிலை அத்தனையும் உண்டாக்கும். அரசாங்க மனிதர்கள் உங்கள் அனபுக்கு பாத்திரமானவர்களாக இருப்பதால், சத்துருக்கள் மூலம் ஏற்படும் இன்னல்களும் களையப்படுகின்றன. குடும்பத்து பிரச்சினைகள் அனைத்தும் உங்களுக்கு கட்டுப்பட்டதாகவே இருக்கின்றன. குடும்பத்தில் சுமுகமான போக்கு உருவாகும். சகோதரர், சகோதரி வகையில் ஏற்பட்ட செலவு சரிகட்டப்படும். கவன மறதி சற்று அதிகமாக இருக்கும். சிறு சிறு பிரயாணமும் உங்களை விடாது.

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

நீங்கள் எதிர்பார்த்த பணம் வந்துவிடும். உங்கள் அலைச்சல் நியாயமானதாக இருக்கும். சகோதரி வகையில் இருந்துவந்த மனபேதங்களை அகற்றிவிடலாம். பெரியவர்கள் அன்பும் ஆதரவும் வளரத்தான் செய்யும். கடந்த காலத்தைவிட இப்போது ஒரு படி ஏற்றம்தானே. தவிர குறைவு இருக்காது. சில வழயில கூட்டு முயற்சியும் குறுகியகால தன ஆதாயமும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் வெறறி உங்கள் பக்கம்தான் இருக்கின்றன. வழக்கு வேகம குறைந்தது. சத்துருக்களைப்பற்றி கவலைப்பட வேண்டியதில்லை. அயல்நாடு, தூரதேச பிரயாணம் கடிதத் தொடர்பு அவசியமாகும். இந்தக்குரு தீயவன் அல்ல. எல்லா வகையிலும் இப்போது உங்களை பின் தொடரும் காலம். உங்கள் வேகமான செயலில் மற்றவரை பொறாமையடையச் செய்யும் என்றாலும், உங்கள் காரியங்கள் எதுவும் தடைப்படாது. மூதாதையர் பொருளை விற்பனை செய்யும் சில



**வரை 9 பாதங்கள்**

நீங்கள் தொழில்வழி வெற்றி வீரர்களாக இருப்பீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்சிகளை உண்டாக்கத்தக்கவன் இந்த குரு. கூட்டுத்தொழில் உள்ளவர்களுக்கு குறிப்பாக பெருத்த ஆதாயம் இருக்கும். இயந்திரம் வாகனம் சம்பந்தமான தொழிலும் பெருமையளிப்பதாக இருக்கும். சிலா உணவுப்பொருட்கள் மூலம் தன செயற்கையும் உடையவர்களாக விளங்குவர். குடும்ப வகைக்கு நாகரிகப் பொருட்களையும் சேர்ப்பீர்கள். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு உயர்பதவியை அளிக்கும். இந்த ஆண்டு தைப் பிறப்பு, பெண்கள் வகைக்கு பட்டாடை சித்தியும் இருக்கும். கலைப்பிரிவு மனிதர்களுக்கு எத்திசை திரும்பினாலும் கண்ணியமாக தன செயற்கையை செய்பவன் இந்த சுக்கிரன். விருந்து வேடிக்கை நிகழ்ச்சிகளை அனுபவித்தலும் உண்டாகும். கலைப்பிரிவினர்களுக்கு வெளியூர்ப் பிரயாணம் முக்கிய அம்சமாகும். சுப விஷயம் குறித்துவரும் கடிதம் மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும். நீங்கள செய்யும் ஒவ்வொரு முயற்சியும் வெற்றிக்கு உறுதுணையாக நிற்கும் என்பதில் சந்தேகம் இல்லை. உறவினர் நிலையும் நிதானமாகவும் அனுகூல கெதியும் இயங்க ஆரம்பித்து விட்டது. பெண்கள் தேக சுகத்தில் மிகவும் கவனம் எடுத்துக்கொள்ள வேண்டி இருக்கிறது. பேறு காலம் உள்ளவர்கள் இதை அவசியம் கவனிக்க வேண்டும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு இந்தக்காலம் பற்றாக்குறையும் உண்டாகும். மனம்விட்டுப் பேச முடியாமல் இருந்த காரியங்கள் செயலுக்கு வரும் காலம். திடீரென வருவாய் உண்டாக்குபவன் குரு. குடும்ப உறவில் நடக்கும் சுப விஷயங்களில் கலந்துகொள்வதும், விருந்து உண்பதும் உண்டு. போட்டி, பந்தயம் விளையாட்டு போன்றவைகளும் உங்களுக்கு ஆதாயம் இருக்கிறது. பெண்கள் மூலமாக சில காரியங்களை முடிப்பது, ஆண், பெண் இரு பிரிவினருக்கும் இருக்கும். உத்தியோகவகை மனிதர்களுக்கு மிகவும் முற்போக்கான மாதமாக இருக்கிறது. நீங்கள் தேக்கி வைத்திருந்த வேலைகளை தொடர்ச்சியாக செய்ய முனையும் போது சிறு இடையூறுகள் இருககத்தான் செய்யும். அதனால் மனத் தளர்ச்சி அடையக்

... இந்த ராசி மாணவர்களுக்கு கல்வி உயர்வு குறித்தபடியே இருக்கும். என்றாலும கவனித்துப் படிக்க வேண்டும். பிரயாணங்களும் இடம் பெறும். உத்தியோப்பிரிவினர்கள் செய்தொழில் வழியில் உயர்வு இருக்கும். அரசியல் மனிதர்கள் மூலம் எதிர்பார்த்த அவசர உதவியை அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மூலமே முடிக்கப் பெறுவீர்கள். புண்ணியஸ்தல பிரயாணம் மேற்கொள்ளவேண்டி இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு, லாட்டறி மூலமும் கடந்த மாதமே உயர்வான பலன்கள் ஆரம்பித்து விட்டன. என்றாலும் இந்த மாதமும் இலாகாவில் திருப்தியான மாற்றங்களை செய்யக்கூடும். உயர்மட்ட அதிகாரிகள் உங்கள் விருப்பத்துக்கு கட்டுப்பட்டவர்களே. கௌரவச் செலவுகளை அதிகமாக உண்டாக்கும். பிரயாணம் எதிர்பார்த்தது. பெருமைக்குரிய நண்பர்களைச் சேர்த்து வைக்கும் போட்டி, பந்தயம் இப்போது தொழில் முக்கியத்துவம் இல்லை. என்றாலும் பண முக்கியத்துவம் இருக்கிறது. மேலும். உறவினரும், நண்பர்களும் உறுதுணையுடன் செயற்படுவர். பழைய பகைமை உணர்ச்சி மாறிவிட்டது. செய்தொழில் வழியில் சிறப்பான பாதைக்கு வந்து விட்டபடியினால். செய்முறையில் சற்று அதிகரித்து இருக்கிறது. கொடுக்கல், வாங்கல் தாராளப் போக்கு தன்னம்பிக்கையும் வளர்ந்துவரும்காலம்.

## மகரம்



**உத்தராடம் 2,3,4வது பாதங்கள்-திருவோணம் 4 பாதங்கள்-அவிட்டம் 1,2 பாதங்கள் வரை 9 பாதங்கள்**

சுக்கிரன், சனி, புதன் கூட்டு சேர்ந்து நன்மை புரிபவர்களே. தனநிலை தாராளப்போக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும். சிலருக்கு போட்டி, பந்தயம், லாட்டறி போனற வழியில் சிறு ஆதாயங்களுக்கு வழியுண்டு. முதலிலேயே உங்கள் செயலுக்கு துணை வருபவனாக இருப்பதால் விட்டுப் போன வேலைகளை தொடர்ந்து முடிக்க பெறும் வாய்ப்பு அளித்திருக்கிறது. உறவினர் வழியில் புதிய திருப்பம் உருவாகி வருவதையும் நீங்கள் உணரலாம். அவசர காலத்தில் செயல்படாமல் நிதானமான போக்கை கடைப்பிடித்தவர் இப்போது வேகமாக இருப்பர். பிறப்பு கால திசையும் அனு

... கள் வேகமான செயலில் மற்றவரை பொறாமையடையச் செய்யும் என்றாலும், உங்கள் காரியங்கள் எதுவும் தடைப்படாது. மூதாதையர் பொருளை விற்பனை செய்தும் சில மாற்றமும் அவசியமாகும். உங்கள் கடன் வழக்குப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். வார்த்தைகளுக்கு மதிப்பு உள்ள காலம் இது. சில விஷயங்களில் நீங்கள் மற்றவர் வார்த்தைக்கு கட்டுப்பட்டே நடக்கவேண்டியிருக்கும். உத்தியோகப் பிரிவினர்கள் சீரான போக்கு உடையவர்களாக இருப்பர். காலம் கடந்துபோன விஷயங்கள் சிலவற்றில் கவனஈர்ப்பு அதிகமாக இருக்கும். மூன்றாவது மனிதர்கள் வார்த்தைக்கு அதிகமாக மதிப்புக்கொடுத்து நடக்கவேண்டியிருக்கும். அலைச்சல் வேலைகள் அதிகமாக இருந்த போதிலும தொடர்ந்து வேலைகள் நடைபெறாமல் முடிந்துவிடும். இரு குடும்பம் உள்ளவர்களுக்கு மறுபகுதி திருப்தியாக இல்லை. இப்போது குரு சரியான பலம் பெற்றிருப்பது. போல் சுக்கிரனுக்கு பலம் இல்லை. கலைப்பிரிவினர்களுக்கு கடைசியில் அதிகமான நன்மைகள் இருக்கின்றன. சிலசமயம் சசசரவுகள் உண்டாக்கி உங்களை வேறுபடுத்தலாம் அதனால் நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கலைப் பிரிவினர்களுக்கு மனத்தெளிவை உண்டாக்கும். வாகனச் செலவும், வழக்குச் செலவு போன்றவைகள் இருக்கும். பிரயாணச்சுகம் குறைவுதான். நீங்கள் இந்த மாதம் கடன் பட்டாவது கௌரவச் செலவு செய்யக்கூடியவர்கள். கணவன், மனைவி உறவு பூசல் உடையதுதான். காத்திருந்த காரியங்கள் சில கடைசி நேரத்தில் தடைப்பட்டுப்போவது குறிப்பிடத்தக்கது. தொழில் கூட்டு வேலையாட்கள் வகை திருப்தியளிப்பதாக இருக்கின்றன. இப்போது கௌரவப் பதவியைப் பெறுதலும் வெளிவட்டாரப் பாராட்டுக்களும் உண்டாகும். மேலும், இப்போது பெரிய திட்டங்களை உருவாக்கும் காலம் இது. தூரத்து மனிதர்களும உதவியாக இருப்பர் அரசாங்கத்திற்கு சில உத்தரவை எதிர்பார்ப்பவர்களுக்கு மனத்திருப்தியாக வந்துசேரும். மறைமுகத தொழில் மூலம் வருவாய் பெற்றவர்களுக்கு இபபோது அவ்வழி வெளிப்படைத் தொழிலாக தனவரவைக் கொடுக்கும்.

(தொடரும்)

சோதிடமேதை ராமன்

நெஞ்சில் துறவார் துறந்தார்போல்
வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல் -குறள்

வலம்புரி

## சாத்தானுக்கு வேதம் ஓதும் இலங்கைச் சட்டங்கள்

2005-ம் ஆண்டு ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் முடிவுறும் என எதிர்பார்த்த பிரதமர் ரணிலுக்கு ஜனாதிபதி சந்திரிகா செய்துகொண்ட இரகசிய சத்தியப் பிரமாணம் உச்சந்தலையடியாக விழுந்து விட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதவிக்காலம் 2005-ம் ஆண்டுடன் முடிவடைந்தால் அவர் மீண்டும் ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் அறவே அற்றுப்போய்விடும்.

அதன் பின்னர் தானே ஜனாதிபதி என்ற கற்பனையில் காலம் கடத்திய பிரதமர் ரணிலுக்கு இரகசிய சத்தியப்பிரமாண விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியதும் பித்தம் தலைக்கேறிய நிலையில், வார்த்தைகளை நிதானமின்றி கொட்டத் தொடங்கியுள்ளார்.

அதன் ஓர் அறிகுறியாக சமாதானப் பேச்சுக்களை தன்னால் ஆரம்பிக்க முடியாது என்று கூறிய பிரதமர் இப்போது சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாகக் கூறிவருகிறார்.

இவ்வாறு முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவிக்கும் பிரதமர் ரணில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை மறந்து பேசுவது மிகப்பெரிய ஆச்சரியத்தை தருகிறது. ஏற்கனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் இருப்புப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாததன் காரணமாகவே சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் சிக்கிப் போயுள்ளது.

இந்நிலையில் பிரதமர் தனக்கு இருக்கக் கூடியதான அதிகாரங்களை மறந்து அறிக்கைகளை விடுவது நாட்டையும், மக்களையும் குழப்புவதாக அமையும்.

எனவே, இதுவிடயத்தில் ஜனாதிபதியின் அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் பிரதமர் ரணில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே உடனடித் தேவையாக இருக்கும்.

இதேவேளை இரண்டு தடவை நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலில் மூன்று தடவை சத்தியப் பிரமாணம் இடம்பெற்றுள்ளதெனில் அது நாட்டையும், மக்களையும் ஏமாற்றும் திருகுதாள நடவடிக்கை என்பது உணரப்படவேண்டிய தொன்றாகும் .

தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்திற்கு, முன்னதாக ஜனாதிபதி தேர்தலை நடத்திய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா 2வது தடவையும் ஜனாதிபதியாக வெற்றியீட்டியதும் ஏற்கனவே கைவிடப்பட்ட ஒருவருட பதவிக் காலத்தையும் சேர்த்துக் கொள்ளும் சூழ்ச்சியில் ஈடுபட்டு, அதற்காக மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சத்தியப் பிரமாணம் செய்வதற்கு உயர் நீதிமன்ற

# குடாநாட்டுப் பாடசாலைகளில் கணனிப் பயன்பாடு குறைவு

## "நிலவு" இணைய பொறுப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் சுமார் ஆயிரம் கணனிகள் இருந்தும் குறிப்பிட்ட ஒரு சில பாடசாலைகளில் மட்டுமே கணனிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மீதியானவற்றில் கணனிகள் காட்சிப் பொருள்களாகவே இன்னமும் இருந்து வருகின்றன.

நேற்றய தினம் யாழ்ப்பாணம் பஸ்ரியன் உணவகத்தில் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக்கான முகாமைத்துவ மென்பொருள் கற்றலுக்கான பல்லூடக இறு வட்டுகள் பற்றிய அறிமுக விழாவில் நிலவு இணையத்தளத்தின் பொறுப்பாளரான எஸ்.அனுராஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விழாவில் பாடசாலை அதிபர்கள், அரச அதிகாரிகள், கல்விப்பணிப்பாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்களும் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வின் போது உலகின் முதலாவது தமிழ்க் கணனி மின் இதழ் உட்பட மொத்தம் 4 இறு வட்டுகள் அறிமுகம் செய்யப்பட்டன.

இங்கு "நிலவு" இணையத்தளப் பொறுப்பாளர் அனுராஜ் தொடர்ந்து குறிப்பிடும் போது, நாம் எப்போதும் எமது பெருமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டு எமது காலத்தையும், நேரத்தையும், சக்தியையும் விணடித்து வருகின்றோமே தவிர புதிய விடயங்களை ஆர்வத்துடன் வரவேற்று அதனைப் பயில்வதில் நாட்டம் காட்டாமல் இருந்து வருகின்றோம். குடாநாட்டில் இருக்கின்ற பாடசாலைகளுள் சுமார் 200 பாடசாலைகளுக்கு அரசாங்கத்தினாலும், பழைய மாணவர் சங்கங்களினாலும், நலன் விரும்பிகளினாலும் கணனிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும் கூட அவையாவுமே முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

இந்தவகையில் நாம் யாரைக்குறை கூறுவது எனத் தெரியாமல் உள்ளது. இதே நிலைதான் யாழ்ப்பாணத்தில் உள்ள உயர் கல்விப் பீடங்களிலும் நிலவுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு இணையத்தளம் ஒன்றினை ஏற்படுத்த நாம் முனைந்த போதிலும் கூட கடந்த 3 வருடங்களாக அது சாத்தியப்படாமலே போய்விட்டது. இதற்கென சுவீடன் அரசு பெருந் தொகையான நிதியை ஒதுக்கீடு செய்துள்ள போதிலும் கூட அது இன்னமும் பயன்படுத்தப்படவில்லை அதேபோல வேறு ஒரு திட்டத்திற்கென வழங்கப்பட்ட 20 மில்லியன் ரூபா நிதியும் பயன்படுத்தப்படாத நிலையில் திரும்பிப் போய்விட்டதாகவும் தெரியவருகின்றது எனத்தெரிவித்தார்.

இவ்விழாவில் கருத்துரையாற்றிய யாழ்ப்பாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் குறிப்பிடும் போது, பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட கணனிகளில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாமலே இருக்கின்றமை உண்மையாகும். பாடசாலை அதிபர்கள் கணனிகளை தொட்டுப்பார்ப்பதற்கு ஆசிரியர்களைக் கூட அனுமதிப்பதில்லை இந்நிலையில் மாணவர்களை அனுமதிப்பது பற்றி யோசிக்கவே தேவையில்லை நாம் இன்று கல்வியில் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றோம். தென்பகுதியில் குறிப்பாக குருணாகல் பகுதியில் இருக்கின்ற இளைஞர்கள், மாணவர்கள் மத்தியில் புதிய உத்வேகம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அவர்கள் கல்வித் துறையில், கணனித்துறையில் முன்னேறி வருகின்றனர். நாம் இங்கு இன்னமும் பழைய நிலையிலே இருக்கின்றோம். சிங்கர் தையல் இயந்திரம், ரளி சைக்கிள் தான் எமக்கு வேண்டும். நல்லது என்ற உணர்வு கொண்டவர்கள்.

எமது அதிபர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மனோபாவ மாற்றம் அவசியம் ஏற்படவேண்டும். எமது பெருமைகளைப் பேசிக் கொண்டிருப்பதால் பயனில்லை புதிய தொழில் நுட்பங்களை பயில வேண்டும் அதற்கு ஏற்ற வகையில் நாம் எமது மாணவர்களைத் தயார் படுத்தவேண்டும் என்றார்.

இவ்விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கவியன்பன் உட்பட வேறும் பலர் கருத்துரைகள் வழங்கினர். (தி-16)

## பன்றிகளால் பயிர் நாசம்

(நவக்கிரி)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள பத்தமேனி, குட்டியப்புலம், திடர்ப்புலம், செல்வநாயகபுரம் மற்றும் தென்மூலை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் பயிர்ச்செய்கைகளை பன்றிகள் நாசம் செய்து வருவதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாகத் தெரியவருகிறது.

மேற்படி பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் மரவள்ளி, கரட், வெங்காயம் மற்றும் இராசவள்ளி போன்றன பயிரிடப்பட்டுள்ளன. விவசாயிகள் பலர் தமது செய்கைகளை காவல் காத்து வருகின்றபோதும் கூட்டமாக வரும் பன்றிகள் அவற்றை அழித்து நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (தி-233)

## வைத்தியசாலை செயற்பாடு வழமைக்குத் திரும்பியது

(நவாலி)

உடுவில் அரசினர் வைத்தியசாலையில் கடந்த 6மாத காலமாக நிலவிவந்த வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் குறைபாடுகள் நிவிர்த்திசெய்து வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக் குறையால் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் வெளிநோயாளர் பிரிவில் காலை 9.00மணி முதல் பார்வையிடுவது தடைப்பட்டிருந்தது.

இதனையடுத்து, கடந்த 6 மாத காலமாக இவ் வைத்தியசாலையில் நிலவிவந்த குறைபாடுகளை நிவிர்த்தி செய்யும்

## வியாழன், வெள்ளிகோள்களை இலங்கையர்கள் பார்க்கலாம்

(கொழும்பு)

செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய கிரகங்களை இலங்கையர்கள் தற்போது பார்வையிடக் கூடியதாக இருப்பதாக இலங்கை "றொக்கெட்" விஞ்ஞான சங்க தலைவர் கலாநிதி அமல் உடலத்த தெரிவித்துள்ளார்.

அந்த வகையில செவ்வாய்க்கிரகத்தை கிழக்கு வானில் இளம் சிவப்பு நிறத்தில் இரவு 8 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம் என்றும்.

வியாழக் கிரகத்தை தினமும் மாலை 6 மணிக்கு பின்னர் உச்சவானில் வெள்ளை நிறத்தில் பார்வையிடலாம் எனவும்.

வெள்ளி கிரகத்தை தினமும் மாலை 6 மணிக்குப் பின்னர் மேற்கு வானில் வெள்ளை மற்றும் நீலம் கலந்த இள நீலநிறத்தில் பார்வையிடலாம் எனவும் "றொக்கெட்" விஞ்ஞான சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (தி-04)

## மணல் ஏற்றிய இருவருக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் உள்ள தனி

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சத்தியப் பிரமாணம் செய்வதற்கு உயர் நீதிமன்றமும் அனுமதியளித்திருப்பதுதான் இங்கு நோக்குதற்குரியது.

நாட்டின் சட்டம்-இறைமை-ஜனநாயகம் என்பவற்றைப் பாதுகாக்க வேண்டிய நீதிமன்றங்களே சட்டத்தைப் பிழையான வழியில் பயன்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாயின் நாடு உருப்படுவதற்கு எத்தகைய வாய்ப்புக்களும் இல்லாமல் போய்விடும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரகசியமாகச் செய்துகொண்ட சத்தியப் பிரமாணம் வெளியில் கசியத் தொடங்கிய போது மௌனம் காத்த ஜனாதிபதியும், அவரது ஊடகப் பேச்சாளரும் இப்போது குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

அதாவது மூன்றாவது தடவையாக ஜனாதிபதி செய்துகொண்ட சத்தியப் பிரமாணத்தால் எந்த வித சிக்கலும் இல்லை. 2005ம் ஆண்டுடன் தனது பதவிக்காலம் முடிவடையும் என்பது போல் மௌனம் காத்த ஜனாதிபதி திடீர் என 2006ம் ஆண்டே தனது பதவிக்காலம் முடிவடையும் என பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

தனது அறிவிப்புக்கு அணிசேர்க்கும் வகையில், தேவையாயின் அரசாங்கம் உயர் நீதிமன்றத்திலோ அன்றி, மேல் நீதி மன்றத்திலோ தனது பதவிக்காலம் பற்றிக் கேட்டறிந்து கொள்ளலாம் எனக் கூறியிருப்பது-

சாத்தானுக்கு வேதம் ஓத இலங்கைச் சட்டங்கள் 'தயாராக இருப்பதையே சுட்டி நிற்கிறது.

இதனையடுத்து, கடந்த 6 மாத காலமாக இவ் வைத்தியசாலையில் நிலவிவந்த குறைபாடுகளை நிவிர்த்தி செய்யும் முகமாக, இம் மாத முற்பகுதியில் சுகாதாரத்திணைக்களத்தால் இரு வைத்தியர்கள் இவ் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டனர்.

இதன் பின்னர், மேற்படி வைத்தியசாலையின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பியுள்ளதுடன், கிழமை நாட்களில் திங்கள் முதல் வெள்ளிவரை காலை 9.00மணிமுதல் 5.00மணிவரையும், சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரையும் வெளிநோயாளர் பிரிவு இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி-102)

ௐ தினசரி தியானம்

## விவேகச் சிந்தனை

எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கையில்லையோ அவனே நாத்திகன். புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்லுகின்றது.

ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே அப்படி நினைப்பது சமயத்திற்கு மிகப்பெரிய முரண்பட்ட கருத்தாகும்.

சுவாமி விவேகானந்தர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் இருந்து சட்டவிரோதமாக மண் அகழ்ந்து செல்ல முற்பட்ட இருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸ் குழு இராசையா பகீரதன், புவனேந்திரன் மயூரன் ஆகிய இருவரையும் கைது செய்தது.

இருவரும் யாழ். மாவட்ட நீதவான் இ.த.விக்ன ராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (தி-51)

## விவசாய நடவடிக்கைகளுக்கு
## உலகவங்கி 40 கோடி உதவி

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விவசாயம், கால்நடை அபிவிருத்திகளை மேற்கொள்ளுவதற்கென, 40 கோடி ரூபாவை வழங்க உலக வங்கி இணங்கியுள்ளது.

உலக வங்கியின் பிரதிநிதியொருவர் அண்மையில் வன்னிக்கு மேற்கொண்ட விஜயத்தினையடுத்தே இந் நிதியை வழங்க உலக வங்கி முன்வந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளங்களைப் புனரமைப்பதன் மூலம் விவசாயத்தை மேற்கொள்ளவும், கால்நடைகள் வளர்ப்பதற்கு உதவுமே இந்நிதி வழங்கப்படவுள்ளது.

இந்நிதி சகல மாவட்டங்களுக்கும் பாகுபாடின்றி பகிர்ந்தளிக்கவேண்டும் என உலக வங்கிப் பிரதிநிதியொருவர் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, கடந்த வருடமும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விவசாய கால்நடை அபிவிருத்திகளுக்கென உலக வங்கி 320 கோடி ரூபாவை வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-60,10)

# மூன்று சடலங்கள் அரச செலவில் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் சூட்டுக்காயத்துடன் மீட்கப்பட்ட சடலம் அரச செலவில் இன்று அடக்கம் செய்யப்படவுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி பிரஸ்தாப நபர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார் எனினும் இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை எம்.பாலகிருஷ்ணன், பெருமாள் ஆகியோரது சடலங்கள் உரிமை கோரப்படாத நிலையில் மொத்தம் மூன்று சடலங்களும் இன்று மு.ப. 10 மணியளவில் பண்ணை மயானத்தில் அரச செலவில் அடக்கம் செய்யப்படவுள்ளன.

மேலும் ஒரு சடலம் அடையாளம் காண்பதற்காக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (த-7)

## இன்று ஆரம்பமாகும்

(திருநெல்வேலி)

யாழ்.உயர் தொழிநுட்ப நிறுவன பகல்நேர மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். உயர் தொழிநுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் அறிவித்துள்ளார். (ச-43)

## நோர்வே பல்கலைக் குழு யாழ்.வருகை

(திருநெல்வேலி)

நோர்வே பல்கலைக்கழக சமூக பொருளாதார அபிவிருத்தித் துறையைச் சேர்ந்த 15 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தது.

இங்கு வந்த அக்குழு வடமராட்சிப் பகுதிக்குச் சென்று கடற்றொழிலாளர் சங்கம், விவசாய சம்மேளனம், சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து அப்பகுதியின் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக ஆராய்ந்துள்ளன. (ச-43)

## ஜப்பான்..

தலைவர் வே.பிரபாகரன், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரை 21ஆந் திகதி புதன்கிழமை அகாஷி சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பையடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, அமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார் என்றும் கொழும்பில் உள்ள ஜப்பானின் தூதரகம் அறிவித்துள்ளது. (ம)

## புலிகளின்...

தெனக் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளால் அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு நாட்டின் இறைமைக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

## பாதுகாப்பு...

மர் ரணில் விக்கிரமசிங்கா இந்தியாவுக்கான விஜயம் மேற்கொண்ட பின்னர் அவர் முன்வைத்த திட்டங்களுக்கமையவே பாதுகாப்பு உடன்பாட்டுக்கான முன்னெடுப்புக்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும், தானும் இராணுவத் தளபதி லயனல் பலகல்லவும் இந்தியாவுக்குச் சென்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அஜய் பிரசாத் ஆகியோருடன் பேச்சு நடத்தியதாகவும் அவர் மேலும் கூறினார். (ச)

## தலை நகரில்...

அத்துடன் கனவான்களாகவும் நடந்து கொள்கின்றனர். எனினும் எதிர்காலத்தில் கொலைக் கலாசாரத்திற்குள் அவர்கள் இறங்க மாட்டார்கள் என நான் உத்தரவாதம் அளிக்கமாட்டேன் எனவும் ஜனாதிபதி கூறினார். (த-6)

# 2005க்குபின் புதிய..

அப்பால் இரகசியப் பதவிப் பிரமாணம் செய்தது பற்றி முதன் முறையாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சரவைக் கூட்டத்தில் கேள்வியெழுப்பினார்.

இதனால் இவ்விவகாரத்தை பாராளுமன்றத்தில் விவாதிக்க அதிகாரமளிக்கப்பட்டதுடன் ஜனாதிபதியின் மேலதிக பதவிக்காலம் பற்றிய தீர்மானம் ஒன்றைத் தயார் செய்யுமாறு கட்சியின் சட்டத்தரணிகளுக்குப் பிரதமர் பணித்திருந்தார். அரசியல் அமைப்பின் 31(2)ஆம் பிரிவின்படி ஜனாதிபதிப் பதவிக்கு இரண்டு தடவை மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்த நபரும் அதன் பின்னரும் அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட முடியாதவராவார். ஜனாதிபதிப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் அல்லது அப்பதவியை பெறும் ஒருவர் ஒரு பதவிப் பிரமாணம் மூலம் அப்பதவியைப் பெறலாம் இதனைப் பிரதம நீதியரசர் முன்னிலையில் அல்லது ஏதாவது மேல் நீதிமன்ற நீதியரசர் முன்னிலையில் செய்து கொள்ள முடியுமென்பதையே உறுப்புரை 32இல்(1)ம் பிரிவு கூறுகின்றது உறுப்புரை 40 (9)இன் படி ஜனாதிபதியின் பதவி காலம் முடிவதற்கு முன்னரே அப்பதவிக்கு வெற்றிடம் ஏற்படின் அப்பதவிக்குத் தகுதியான ஒருவரை பாராளுமன்றம் தெரிவு செய்ய முடியும் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் முன்னையவரின் பதவிக் காலம் முடியும் வரை மாத்திரமே பதவியில் இருக்க முடியும் இவ்வாறு அரசாங்கம் சுட்டிக் காட்டுகிறது.

இது தொடர்பாக சபாநாயகரிடம் இருந்து பதில் ஒன்றை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருமதி குமாரதுங்கா மூன்றாவது தடவையாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதால் அவரின் பதவிக்காலம் முடிய மீதமுள்ள காலத்திற்கு ஒரு ஜனாதிபதியை முறைப்படி தெரிவு செய்யும் படியான சாத்தியப்பாடுகள் குறித்து சபாநாயகரின் பதிலை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (த-6)

# இடைக்காலத் திட்ட...

நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோரும் பங்குபற்றுவர். இவர்களுடன் புலிகளின் வெளிநாட்டு கொள்வனவாளர் குமரன் பத்மநாதனும் இக்குழுவில் அங்கம் வகிப்பார்.

இதேவேளை தமிழ்ச்செல்வன் இம் மாதம் நோர்வேக்குச் சென்று பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசனைச் சந்திக்கவிருக்கிறார். அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய நிலைபற்றி ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பேசுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கனடா சமஷ்டி அமைப்பைச் சேர்ந்த பொப் ரீ என்பவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு சமஷ்டித் திட்டம் பற்றி சமாதானச் செயற்பாடுகளில் ஈடுபடும் சகல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-6)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

**G.C.E[O/L] YEAR** 2005ற்கு புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. சிறந்த ஆசிரியர்கள். ஒரு பிரிவில் 15 மாணவர்கள் தனித் தனிக் கவனம் கொடுக்கப்படும். புதிய பதிவுகள் அதிபர், 426(302),**K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். (8128)

கணனி உலகிற்கு ஓர் புதிய பாதை....

**eTouch COMPUTER SYSTEM**

தொடக்க நாள் நிகழ்விற்கான அழைப்பு

*காலம் : 19-01-2004(திங்கட்கிழமை) மாலை 4.00 மணி*

*இடம் :* eTouch COMPUTER SYSTEM, *உடுவில் வீதி, மருதனார்மடம்*

**பிரதம விருந்தினர்**

திரு S.திருவாகரன் - பிரதேச செயலாளர், உடுவில்

**சிறப்பு விருந்தினர்கள்**

திருமதி கோகிலா மகேந்திரன் - உதவிக் கல்விப் பணிப்பாளர்,வலிகாமம் வலயம்

திருA.R.குலேந்திரன் - முகாமையாளர், கொமர்ஷல் வங்கி,சுன்னாகம்

திரு சேனக வீரசிங்க - பொறுப்பதிகாரி (Officer- in-Charge), பொலிஸ் நிலையம்,சுன்னாகம்

**கௌரவ விருந்தினர்கள்**

திரு V.பத்மநாதன்



**PILLIAR INN GARDEN RESTAURANT**

மலர்ந்த புத்தாண்டில் மக்களுக்கு பல சேவைகளை வழங்கவுள்ளார்கள் பிள்ளையார் காடின் றெஸ்ரோறன்ஸ்

- காலை உணவு
- மதிய உணவு
- இரவு உணவு
- சிற்றுண்டிகள்
- சப்பாத்தி
- பூரி
- ஆட்டாமா பிட்டு
- குரக்கன் பிட்டு
- சைனிஸ் உணவு
- இந்திய உணவு

- குளிர்ந்த பியர் (*Chiled Beer*)
- கொக்ரெயில்ஸ் (*Cocktails*)

## கௌரவ விருந்தினர்கள்

| | |
|---|---|
| திரு V.பத்மநாதன் | - பயிற்சி உத்தியோகத்தர், N.A.I.T.A |
| திரு P.சுந்தரலிங்கம் | - அதிபர், யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பளை |
| திரு S.புண்ணியசீலன் | - அதிபர், யா/யூனியன்கல்லூரி, தெல்லிப்பளை |
| திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் | - அதிபர்,இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம் |
| திரு M.நாகேந்திரசீலன் | - அதிபர், மல்லாகம் மத்திய கல்லூரி |
| திரு K.சிவாஜி | - அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம் |
| திரு துரை எங்கரசு | - அதிபர், இணுவில் மத்திய கல்லூரி |
| திரு S.R.ஜேசுபாலன் J.P | - ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், உடுவில் |
| திரு S. பாலசுப்பிரமணியம் | - கிராமசேவையாளர், உடுவில் தென்கிழக்கு |

கனனி ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் - நிர்வாகத்தினர்

(6100)

- குளிர்ந்த பியர் (*Chiled Beer*)
- கொக்ரெயில்ஸ் (*Cocktails*)

- விசேட வைபவங்களுக்கு உங்கள் இடத்துக்கு வந்து உணவு வகையறாக்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்
- உணவுகள் சிற்றுண்டிகள் பார்சலாக தரப்படும்.
- முன்கூட்டிய ஓடர்களுக்கு வீட்டுவாசலில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.
- குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள்.
- உங்கள் பயண நலன்கருதி குளிரூட்டப்பட்ட வாகனம்.
- இருந்த இடத்திலிருந்தே லைன்ஏயர் (**Lion Air**), எக்ஸ்போ ஏவியேசன் (**Expo Aviation**) விமான பயணச் சீட்டுக்கள்



போன்ற அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ள வேண்டிய இடம்.

பிள்ளையார் இன் (*Stores*)
31. மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

*T.P. - 021 222 5595*
*T.P. - 021 222 2829*
*Fax - 021 222 5595*
*E-mail - Piyarinn@sltnet.lk*
*Website - WWW.Pillaiyarinn.com*

[C/7189]

## மங்களகரமான திறப்பு விழா அழைப்பும்
### இடம் மாற்ற அறிவிப்பும்

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைத்திங்கள் 5ஆம் நாள் இன்று (19.01.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்

உங்கள் தேவையே எங்கள் சேவையாக வழங்குகின்ற.

### சேரண்டிப் ஏயர் லைன்ஸ்
### SERENDIB AIR LINES

என்ற ஸ்தாபனம் இல.86 பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மங்களகரமாக ஆரம்பிக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். ஆகவே அத்தருணம் எமது முகவர்கள், அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள், வாடிக்கையாளர்கள் அனைவரும் சமுகம் தந்து விழாவைச் சிறப்பித்து எமக்கு ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: எமது ஸ்தாபனம் இதுவரைநாளும் இல.13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இனிமேல் விமானப் பயண ஒழுங்குகளுக்கு எமது புதிய இடமான இல.86, பருத்தித்துறை வீதி முகவரிக்கே விஜயம் செய்யுங்கள். உங்கள் சௌகரியமான சுகமான விமானப் பயணங்களுக்கு உடனடியாக நாடவேண்டிய இடம் சேரண்டிப் ஸ்தாபனமே.**

(C/7190)

Serendib Express
Feel the Difference

தலைமை அலுவலகம்,

**SERENDIB LINES**
**86, POINT PEDRO ROAD,**
**JAFFNA.**
**T.P. : 021 222 6242**
**Fax : 222 5600**
**Note :** ஆரியகுளம் சந்திக்கும் வேம்படி மகளிர் கல்லூரிச் சந்திக்குமிடையில்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.